விலை: 60.00
பக்கங்கள் : 24
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

# வலம்புரி
## சங்குநாதம்

EDUS
Learning made lovable
இலங்கையின் No.1 கல்வி
நிறுவனத்துடன் இணைந்திடுங்கள்...!
தரம் 1 - G.C.E A/L வரை
Professional Courses for Everyone
0777 123 330 (11705)

சங்கு 23
ஒலி 168 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 22 ஞாயிற்றுக்கிழமை (05.06.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## ஒரு வருட காலத்துக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் இல்லை

### பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை தீர்மானம்

(கொழும்பு)

ஒரு வருட காலத்திற்கு சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளைப் பெறுவதைத் தவிர்ப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அமைச்சரவை ஒரு வருட காலத்திற்கு சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளைப் பெறுவதைத் தவிர்ப்பதற்குத் தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் சமர்ப்பிக்க உள்ளார்.

பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து வாழும் மக்களுக்கு நிவாரணம் கொடுக்கவே ஒரு வருட காலத்திற்கு அமைச்சரவை அமைச்சர் ஒருவரின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைப் பெறுவதை அமைச் ▷23

வலம்புரியின் முன்னாள் செய்தி ஆசிரியர்

## ஓங்காரரூபி சண்முகநாதன் விபத்தில் காலமானார்




(யாழ்ப்பாணம்)

வலம்புரி பத்திரிகையின் முன்னாள் செய்தி ஆசிரியரும் ஓய்வுபெற்ற படவரைஞரும் யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீனத்தின் நிர்வாகத் தொண்டருமாகிய செல்வி ஓங்காரரூபி சண் முகநாதன் (வயது-72) நேற்று ▷23

# இலங்கைக்கு மேலும் உதவிகள் வழங்குவோம்

### தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் இலங்கை உயர்ஸ்தானிகரிடம் உறுதி




*(சென்னை)*

***இலங்கை மக்களுக்கு அவசியமான அத்தியாவசியப் பொருட்களை மேலும் வழங்குவதற்கு எதிர்பார்த்திருப்பதாக தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொறகொடவிடம் உறுதியளித்துள்ளார்.***

தமிழக முதமைச்சர் மு.க. ஸ்டாலின் மற்றும் இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொறகொட ஆகி ▷23

லாஃப்ஸ் எரிவாயு

## இன்று முதல் விநியோகம்

(கொழும்பு)

லாஃப்ஸ் எரிவாயு விநியோகம் இன்று முதல் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

லாஃப்ஸ் நிறுவனத்துக்கு எரிவாயுவை கொண்டு வரும் கப்பல் ஒன்று ▷23

பாடசாலைகள்

## திங்கள் முதல் மீள ஆரம்பம்

(கொழும்பு)

அரச மற்றும் அரச அனுசரணையின் கீழ் இயங்கும் தனியார் பாடசாலைகளின் கற்றல் நடவடிக்கைகள் நாளை திங்கட்கிழமை முதல் மீள ஆரம்பமாகவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள் ▷23

## வவுனியாவில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு



(வவுனியா)

வவுனியா, தாண்டிக் குளம் பகுதியில் நேற்றுப் பிற் பகல் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் பலி யாகியதோடு மற்றையவர் படுகாயமடைந்துள்ளார்.

ஓமந்தைப் பகுதியில் இருந்து வந்த ▷23

## இரு தரப்பு உறவும் பாதிக்கமுன் ரஷ்ய பிரச்சினைக்கு தீர்வு காணுங்கள்

### அமைச்சர் தினேஷ் குணவர்த்தன



(கொழும்பு)

ரஷ்ய 'ஏரோப்ளோட்' விமானம் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காண விரைவாக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள் ளார்.

ரஷ்ய 'ஏரோப்ளோட்' விமானம் ஒன்று இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் கொழும்புக்கான விமான சேவைகளை ▷23

அனலைதீவில்

## மனித எச்சங்கள் கரையொதுங்கின

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அனலைதீவு பகுதியில் உருக்குலைந்த நிலையில் ▷23

## நீர்ப்பாசன வாய்க்காலில் விழுந்த 2 வயது குழந்தை பலி



### கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

நீர்ப்பாசன வாய்க்காலில் மூழ்கிய இரண்டு வயது ஆண் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரவிப் ▷23

யாழ்.போதனாவில் நிலவிய

## அத்தியாவசிய மருந்து தட்டுப்பாடு நீங்கியது

### வைத்தியர் யமுனானந்தா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் காணப்பட்ட அத்தியாவசிய மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்திக்கும் பொருட்டு நேற்று தேவையான மருந்துப் பொருட்கள் கிடைக்கப் பெற் ▷23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணமகள் தேவை**

90 கேட்டை, 33 பாவம்,
Software Engineer
லண்டன் மணமகன்,
பட்டதாரி மணமகள் தேவை.
(11762)

துர்க்கா திருமண சேவை
077 818 5978

இயங்காத நிலையில் உள்ள அனைத்துவிதமான தொலைபேசிகளும் கொள்முதல் செய்யப்படும்.

**A.R.K MOBILE SHOP**
No:62, Hospital Road, Jaffna.
(மரக்கறிச் சந்தைக்கு முன்பாக)
(C-4431)


# வடமராட்சி திக்கத்தில் கஞ்சாவுடன் மூவர் கைது

வடமராட்சி திக்கம் சந்திக்கு அருகாமையில் உள்ள வீடொன்றில் புதைத்து வைக்கப்பட்ட கஞ்சா மற்றும் பணம் என்பன மீட்கப்பட்டுள்ளது.

அத்துடன் சந்தேகத்தின் பேரில் மூவரை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

திக்கம் திருமண மண்டபத்திற்கு முன்னால் உள்ள வீடொன்றில் புதைத்து வைக்கப்பட்ட ஒரு கிலோ 90 கிறாம் கஞ்சா மற்றும் 40ஆயிரத்து 460 ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளது.

கஞ்சாவை மறைத்து வைத்துள்ள குற்றச்சாட்டில் அப்பகுதியைச் சேர்ந்த 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7,60)

# மரண அறிவித்தல்

## திருமதி மகேஸ்வரி நவரத்தினம்

**( யோகம்மா ரீச்சர் )**



மில் லேன், பிரம்படி, கொக்குவிலைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி நவரத்தினம் அவர்கள் நேற்று (04.06.2022) சனிக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லர் நவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி - பொன்னம்மா தம்பதியரின் மூத்த மகளும் சுகுமார் (ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர்), ரேணுகா (ஓய்வுபெற்ற ஆசிரியை), ராகுலன் (குடிவரவு குடியகல்வுத் திணைக்களம்), சந்திரிகா (ஆசிரிய ஆலோசகர் - யாழ். கல்வி வலயம் ) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற சிவராசா மற்றும் கௌரி (ஆசிரியை - கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் அரவிந், மைவிழி - தமிழ்ச்செல்வன், பிலஹரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சண்முகநாதன், சறோஜினிதேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று (05.06.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-4438)

தகவல் :- குடும்பத்தினர்


**உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?**

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், புருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள் (11758)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

**நீர்க்கசிவு** பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு
**Water Proofing**

மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள், வீடுகள், கோவில்களில் ஏற்படும் நீர்க்கசிவினைத் தடுப்பதற்கு Finex ஸ்தாபனத்தாரின் அசல் கட்டட இரசாயனப் பொருட்கள் Barralastic Master Seal 540 போன்றவற்றை கொள்வனவு செய்யும்போது Finex ஸ்தாபனத்தில் அனுமதி பெற்ற முகவர்களிடம் மட்டும் பெற்றுக் கொள்ளவும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

ஒரு சதுர அடி 170 /= 10 வருட உத்திரவாதத்துடன்

உலகத்தரம்மிக்கது

போலி இரசாயனத்துடன், போலி முகவர்கள் உங்கள் இல்லம் தேடி வந்து கேட்பார்கள். ஏமாற வேண்டாம்.

வட மாகாணத்தில் முதன் முதலில் அறிமுகம் செய்தவர்கள் (11751)

FINEX இரசாயனப் பொருட்களை விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

**North and East Engineering**
55, Stanly Road, Jaffna, Sri Lanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000

ONLINE CLASS

**A/L - 2024**

பிரிவுக்கான
கணித, உயிரியல் வகுப்புக்கள் ஆரம்பம்

**BIO & MATHS STREAM**

தமிழ் மொழி மூலம் & English Medium

ZOOM ஊடாக

ஆரம்பம் - 04.06.2022 Sat 10.30 am

PHYSICS
S.R.JEYAKUMAR
B.Sc, PGDE, PGDCT

PHYSICS
S.SRIKANAGASABAI
B.Sc, PGDE, M.sc

Com. MATHS
S.PREMNATH
B.Sc

CHEMISTRY
V.PARAMESWARAN
B.Sc,PGDE

CHEMISTRY
V.SELVARANJAN
B.Sc,PGDE

Com. MATHS
V.RAJARATNAM
B.Sc, PGDE

BIOLOGY
V.UMASHANGER
B.Sc,PGDE

BIOLOGY
MAHIMA RUPASINGAM
B.Sc, PGDE

**NOBLE ACADEMY**
No. 06C, Ramakrishna Road, Wellawatte,
Colombo 06. Tel : 0112 360 848 | 0112 505 816
தொடர்புகளுக்கு : 074 033 9925
(11764)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் 13.06.2022



### வர்த்தக நிலையங்களுக்கான இடம் வழங்கல்

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் 13.06.2022 திங்கட்கிழமை இடம்பெறவிருக்கின்றது. பொங்கல் உற்சவகால வர்த்தக நிலையங்கள் அமைப்பதற்கான இடங்கள் 09.06.2022 வியாழக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 12.06.2022 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.00 மணி வரை வழங்கப்படும்.

வியாபாரிகள் உரிய காலத்தில் தமக்குரிய இடங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன் 12.06.2022 ஞாயிற்றுக்கிழமை பி.ப 5 மணிக்குப் பின்னர் வாகனங்கள் ஆலய வளாகத்தினுள் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.

- பொங்கல் உற்சவத்திற்கு வருகைதரும் அடியவர்கள் பாதுகாப்பை கருத்திற் கொண்டு தங்க ஆபரணங்களை அணிந்து வருவதை தவிர்த்துக்கொள்ளவும்.

குறிப்பு - காவடி உரிமம் பெறாதவர்கள் 09.06.2022 முன்னர் பதிவு செய்து கொள்ளவும்.

**(சுகாதார நடைமுறைகளை கருத்திற்கொள்ளவும்)**

தலைவர்
வற்றாப்பளை, முள்ளியவளை. (C-4439) வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபை.


# பயன்படுத்தப்படாத நிலங்களில் பயிர்ச்செய்கையை ஆரம்பியுங்கள்

## ஜனாதிபதி பணிப்புரை

**(கொழும்பு)**

**பெருந்தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத அனைத்து நிலங்களையும் கண்டறிந்து, அவற்றில் உணவுப்பயிர்களைப் பயிரிடுவதற்கான துரித வேலைத்திட்டத்தைத் தயாரிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.**

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பெருந்தோட்டத்துறை முகங்கொடுத்திருக்கும் சவால்கள் தொடர்பில் அமைச்சர் ரமேஷ் பத்திரண, அமைச்சின் செயலாளர் பி.எல்.ஏ.ஜி. தர்மகீர்த்தி மற்றும் அமைச்சின் துறைசார் நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்ட உரிய அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

பெருந்தோட்ட நிறுவனங்களுக்குச் சொந்தமான 9,000 ஹெக்டேயர்களுக்கும் அதிகமான பயிரிடப்படாத நிலங்கள் உள்ளன. 23 கம்பனிகளுக்குச் சொந்தமான அந்த நிலங்களில் பயிர்ச் செய்கையை முன்னெடுப்பதற்கு ஏற்ற பயிர்களை இனங்கண்டு, அவற்றைப்



பயிரிடுபவர்களுக்கு அந்த நிலங்களை வழங்குவேண்டியதன் அவசியத்தையும் இதன்போது ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தேயிலை ஏற்றுமதியினால் நாட்டிற்குக் கிடைக்கும் அந்நியச்செலாவணி வெளிப்படைத்தன்மையுடன் பேணப்பட வேண்டும். அதற்காகத் தேயிலை ஏலத்தை டொலர்களில் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து உடனடியாக ஆராயுமாறு ஜனாதிபதி வலியுறுத்தினார். (4)


# மரண அறிவித்தல்



செல்வி

## ஓங்காரரூபி சண்முகநாதன்

(சிவகுரு ஆதினத்தின் முழுநேர தொண்டர்)

மண்டைதீவு 7 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஓங்காரரூபி சண்முகநாதன் நேற்று (04.06.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகநாதன் - அன்னலட்சுமி தம்பதியினரின் அருமை மகளும் காலஞ்சென்ற மகாலட்சுமியின் சிறிய மகளும் காலஞ்சென்ற சிவஞானசுந்தரத்தின் மருமகளும் திருமதி அருள்மொழிதேவி, திருமதி யோகராணி ஆகியோரின் சகோதரியும் சிவரஞ்சனின் மைத்துனியும் மாதுளனின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாருக்கான பிரார்த்தனைகள் இன்று 05.06.2022 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 11 மணியளவில் இல.692, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீனத்தில் நடைபெற்று 12.30 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.692, பருத்தித்துறை வீதி, நல்லூர். 021 222 0103 077 222 0103 தகவல்: சிவகுரு ஆதீனம்


# மத்திய வங்கி ஆளுநர் தொடர்பில் கோட்டா-ரணில் முரண்பாடு

(கொழும்பு)

மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் கலாநிதி நந்த லால் வீரசிங்கவை பதவி நீக்கம் செய்து தனது நண்பரான தினேஸ் வீரக்கொடிக்கு பதவியை வழங்குமாறு பிரதமர் கடந்த வாரம் ஜனாதிபதியை சந்தித்து கோரிக்கை விடுத்திருந்தார்.

தனது கோரிக்கை நிறைவேற்றப்படாவிடின் பிரதமர் மற்றும் நிதியமைச்சர் பதவிகளில் இருந்து விலகுவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு கோட்டாபய தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளதுடன் அதனை ஒரு போதும் செய்ய முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டை ஆட்சேபித்துள்ள ரணில் விக்கிரமசிங்க, நிதியமைச்சர் மற்றும் பிரதமர் பதவிகளில் இருந்து விலகுவதாக தெரிவித்துள்ளார்.

விக்கிரமசிங்கவின் இந்த பதிலால் ஜனாதிபதி கோபமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)


# வேலை வாய்ப்பு

நெல்லியடியில் இயங்கும் சர்வதேச காப்புறுதி நிறுவனத்திற்கு பின்வரும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

**1. வெளிக்கள முகாமையாளர்**

தகைமை
- 01 வருட காலம் காப்புறுதி துறையில் பணிபுரிந்தவர்கள்.
- பல்கலைக்கழக மாணவர்கள் (படிக்கும் மாணவர்கள்/ படித்து முடித்த மாணவர்கள்)

**2. வெளிக்கள உத்தியோகத்தர் (பகுதி நேரம்/ முழு நேரம்)**

தகைமை
- A/L சித்தி.
- வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.

(C-4436)

**சம்பளம் - கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.**

மேலதிக தொடர்புகளுக்கு : 076 879 2992

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

## ரங்கநாதன் பத்மாவதி

கடந்த 07.05.2022 அன்று
சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்
**ரங்கநாதன் பத்மாவதி**
(கிளிக்கையின் மனைவி)
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள்
நாளை (06.06.2022) திங்கட்கிழமை
காலை 5.00 மணியளவில்
ஊறணி மடத்தில் நடைபெறும்.
தொடர்ந்து அன்னாரது இல்லத்தில்
நடைபெறும் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும்
மதியபோசனத்திலும்
கலந்துகொள்ளுமாறு உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள்
அனைவரையும் அன்புடன்
கேட்டுக்கொள்கிறோம்.

**A.G.A லேன்,**
**வல்வெட்டித்துறை.**

(C-4437)

**பிள்ளைகள்**

---

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



**கடந்த 04.05.2022 புதன்கிழமை அன்று**
**சிவபதமடைந்த**
**எங்கள் குடும்பத் தலைவர்**

## அமரர் கதிரவேலு ஆனந்தசோதி

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (05.06.2022) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள் ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(11761)

யோகானந்தா வீதி,
மஞ்சத்தடி தெற்கு, இணுவில்.

தகவல்:-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கைக்கான ஆசிய பசுபிக் பிராந்திய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அமைப்பு HSBC வங்கி அனுசரணையில் இடர்முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்து சுமார் 10 மில்லியன் பெறுமதியான மருந்துகள் சுகாதார அமைச்சிடம் அண்மையில் கையளித்தது.

## முதியவரின் மிளகாய் பொதியை பறித்து சென்ற திருடர்கள்

(கரணவாய்)

வடமராட்சி துன்னாலை பகுதியில் முதியவரிடம் மிளகாயப் பொதியை அபகரித்துச் சென்ற சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் மாலை இடம் பெற்று ள்ளது.

துன்னாலை பகுதியில் முதியவர் ஒருவர் அப்பகுதியில் உள்ள அரைக்கும் ஆலையில் மிளகாயை அரைப்பதற்காக கொண்டு சென்றுள்ளார்.

குறித்த முதியவரின் பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவரிடம் இருந்து மிளகாய்ப் பொதியை அபகரித்து சென்றுள்ளனர். முதியவர் கூக்குரலிட்ட போது அயலவர்கள் ஒன்று கூடிய போதிலும் மோட்டார் சைக்கிளில் பயணித்த திருடர்கள் மின்னல் வேக த்தில் தப்பிச் சென்றுள்ளனர். (4-6-60)


# 4ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1947 – 09 – 13



மறைவு 2018 – 05 – 20

## அமரர்.சின்னத்தம்பி பொன்னம்பலம் (மகாலிங்கம்)

(கார் உரிமையாளர்- பஸ்தரிப்பு நிலையம்- சுன்னாகம்)

திதி– பூர்வபக்க ஷஷ்டி

உழைப்பின் சிகரமாய்
உண்மையின் உறைவிடமாய்
உறவுகளுக்காக வாழ்ந்தவரே!
எம் குடும்ப வழிகாட்டியாக
எங்களுக்காகவே வாழ்ந்தவரே!
ஆண்டுகள் நான்கு கடந்தாலும்
அழியாது என்றும் உம் நினைவுகள்.

(11743)

ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
(விதுஜா கூல் ஸ்பொட்)
K.K.S வீதி மல்லாகம்.

என்றும் உங்கள் நீங்காத
நினைவுகளுடன்,
குடும்பத்தினர்.

# 31ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 1935 . 12 . 15



இறப்பு 2022 . 05 . 07

## அமரர்.திருமதி.சதானந்தம் சிவபாக்கியம்

07.05.2022 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(11740)

பாடசாலை வீதி, துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்.
மகன்–கிருபராஜா–077 303 9628


# இராசிபலன்

05.06.2022
வைகாசி 22, ஞாயிற்றுக்கிழமை
சஷ்டி பின்னிரவு 3.24 மணிவரை

ஆயிலியம் முன்னிரவு 9.45 மணிவரை
சுபநேரம் -8.52 -10.22 மணிவரை
இராகுகாலம் -4.22-5.52 மணிவரை

சஷ்டி விரதம்,
சர்வதேச சுற்றுச்சூழல் தினம்
சந்திராஷ்டமம்-பூராடம்,
உத்திராடம்

வளவன்


மேஷம்

தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அழகு சாதனப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.


கடகம்

இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும், போசன சுகமுண்டு, நண்பர்கள் வழியில் நன்மைகள் நடைபெறலாம், கௌரவமானவர்களின் சந்திப்பு இடம்பெறும் வாய்ப்புண்டு.


துலாம்

தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், குடும்பத்தில் சந்தோசம் குடிகொள்ளும், உற்சாகமான நாள்.


மகரம்

பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்,மறக்க முடியாத இனிய சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.


ரிஷபம்

மூத்த சகோதரர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவர், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும்,விடா முயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும்.


சிம்மம்

எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள்.


விருச்சிகம்


வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்,புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும், ரோக பயமுண்டு, வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


கும்பம்

மாற்றுக்கருத்துடையோர் மனம் மாறுவர், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், உற்சாகமான நாள்.


மிதுனம்

கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், வெளியூர்ப் பயணங்களால் பலனுண்டு, வாக்கு மேன்மையுண்டு.


கன்னி

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், ஒளிமயமான எதிர்காலத்திற்கு உறுதுணைபுரியும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.


தனுசு

எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்,கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது,தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம்.


மீனம்

நீண்ட நாட்களாக திட்டமிட்டிருந்த காரியம் இன்று கைகூடும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமைகள் வந்து சேரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி மருத்துவமனையில் சடலங்களை பாதுகாக்கும் குளிரூட்டி பழுது

## சடலங்களை யாழ்.போதனாவிற்கு அனுப்ப வேண்டிய நிலை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின்பயன்பாட்டில்காணப்பட்ட சடலங்களை பாதுகாப்பாக வைத்திருக்கும் கூலர் குளிரூட்டி பழுதடைந்திருப்பதால் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டிய சடலங்களை யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என சாவகச்சேரி மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகர் திருமதி. டயாழினி மகேந்திரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஒரு வார காலமாக கூலர் இயந்திரம் பழுதடைந்திருப்பதால் திடீர் மரணமடைந்து சாவகச்சேரி மருத்துவமனைக்கு வரும் சடலங்களை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டியதன் பொருட்டு யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் எரிபொருள் தட்டுப்பாடு, விலை ஏற்றம் ஆகியன காணப்படும் இச்சூழலில் சடலங்களை சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் இருந்து யாழ்.போதனா மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் போக்குவரத்துச் செலவினையும் உயிரிழந்தவர்களது உறவுகளே ஏற்க வேண்டிய நிலைமையும் காணப்படுகின்றது குறிப்பிடத்தக்கது. மேலும் இந்தக் குறைபாடு விரைவில் நிவர்த்தி செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.(4-6-30)

# மருத்துவரை தாக்கிய இளைஞர்களுக்கு விளக்கமறியல்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பகுதியில் உள்ள அரச மருத்துவனைக்குள் நுழைந்து மருத்துவரை தாக்க முயன்ற குற்றச்சாட்டில் கைதான 8 இளைஞர்களையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை கொடிகாமப் பகுதியில் உள்ள அரச மருத்துவமனைக்குச் சென்ற பெண்ணிடம் கடமையில் இருந்த மருத்துவர் தொலைபேசி இலக்கம் கேட்டார் எனக் கூறி எட்டு இளைஞர்கள் மருத்துவர் வளாகத்திற்குள் நுழைந்து மருத்துவரை தாக்க முயன்ற நிலையில் கொடிகாமப் பொலிஸார் அவர்களை கைது செய்திருந்தனர்.

இந்நிலையில் அவர்கள் எட்டுப் பேரையும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நீதிமன்றில் முற்படுத்தியதில் அவர்களை 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளது. (4-6-30)

# நல்லைக்குமரனின் 30 ஆவது மலருக்கு ஆக்கம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை சைவசமய விவகார குழுவினால் வெளியிடப்படும் 2022 ஆம் ஆண்டுக்கான நல்லைக்குமரன்30 ஆவது மலருக்கான ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

ஆக்கங்களை அனுப்பும்போது பின்பற்ற வேண்டிய விடயங்களாக கட்டுரைகள் 5-7 பக்கங்களுக்குள் அமைதல் வேண்டும்.

ஏற்கனவே நல்லைக் குமரன் மலரில் வெளிவந்த, வேறு நூல்களில் வெளிவந்த ஆக்கங்கள் தவிர்க்கப்பட வேண்டும். ஆக்கங்களை மின்னஞ்சல் முகவரி Sawasamayavivaharam@gmail.com என்ற மின்னஞ்சல் மூலம்/இறுவட்டுக்கள் மூலம் அனுப்புவது அவசியமாகும்.

தங்கள் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்களை குறிப்பிடல் அவசியம். ஆக்கங்களை பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 01.07. 2022 இற்கு பிந்திக் கிடைக்கும் ஆக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என யாழ்.மாநகரசபை ஆணையாளரும், சைவ சமய விவகாரக்குழு தலைவரான இ.த. ஜெயசீலன் அறிவித்துள்ளார். (4-6)

# வட்டு.யாழ்ப்பாண கல்லூரியின் பழைய மாணவர்கள் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்லூரியைப் பாதுகாப்போம் என்ற தொனிப் பொருளில் அக்கல்லூரிபழைய மாணவர்களின் அமைப்பினால் நேற்று கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டமானது காலை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு முன்பாக, தெல்லிப்பழை வீதியின் இருமருங்கிலும் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுநர் சபையில் இடம்பெறும் மோசமான யாப்பு மீறல்களைக் கண்டிக்கும் வகையிலும், கல்லூரியின் நிர்வாகத்தில் ஆளுநர் சபையின் தலைவர் மேற்கொண்டு வரும் முறையற்ற தலையீடுகளை எதிர்க்கும் வகையிலும், யாழ்ப்பாணக் கல்லூரி நிதிகளின் தர்மகர்த்தா சபைக்கு எதிராக ஆளுநர் சபையினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் இடம் பெற்றது.

இந்தப் போராட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப்பலரும்கலந்து கொண்டனர். (4-6-18-33-104)

# குளவிக்கொட்டுக்கு இலக்கான யுவதி

(சாவகச்சேரி)

தென்மராட்சி-எழுதுமட்டுவாழ் வடக்குப் பகுதியைச் சேர்ந்த யுவதி ஒருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் கருங்குளவிக் கொட்டிற்கு இலக்கான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எழுதுமட்டுவாழ் வடக்கு பகுதியைச் சேர்ந்த 21 வயதான யுவதி ஒருவரே இவ்வாறு சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தற்போது கடும் காற்றுடன் கூடிய காலநிலை நிலவுவதால் தென்மராட்சிப் பகுதியில் அடிக்கடி குளவிக் கூடுகள் கலைந்து ஆபத்தை ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-6-30)

# ஜப்பானிய மொழி பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியில் ஜப்பானிய மொழி பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன்றன.

மேற்படி கற்கை நெறியினை கற் பிக்க தகைமையுடைய விருப்பமானவர்கள் தமது சுயவிபரக் கோவையுடன் விண்ணப்பிக்க முடியும்.

பயில விரும்புவோர் தொழில் நுட்பக் கல்லூரியுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும்.

விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

மேலதிக தொடர்புகளுக்கு தொழில் நுட்பக்கல்லூரியுடன் நேரடியாகவோ அல்லது 021 222 0028, 021 221 2402, 021 222 2358 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொட ர்பு கொள்ள முடியும் என யாழ். தொழில் நுட்பக்கல்லூரியின் பணிப்பாளர் S.முகுந்தன் அறிவித்துள்ளார். (4-6)

# நயினாதீவு நாகபூஷணி அம்மன் வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பதினாறு நாட்கள் இடம் பெறவுள்ள இவ் ஆலய திருவிழாவில் எதிர்வரும் ஜூலை 11 ஆம் திகதி திங்கட் கிழமை பகல் கயிலைக்காட்சியும் இரவு சப்பரமும் அடுத்தநாள் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரதோற்சவமும் மறுநாள் 13 ஆம் திகதி புதன்கிழமை கங்காதரணியில் தீர்த்தோற்சவமும் இரவு திருவூஞ்சல் கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது என ஆலய அறங்காவலர் சபை அறிவித்துள்ளது. (4-6)

கதிர்காமகந்தன் ஆலயத்திற்கான பாதயாத்திரை தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் இருந்து நேற்றைய தினம் சனிக்கிழமை காலை ஆரம்பமாகிய இவ்வருடத்திற்கான பாதயாத்திரையில் நூற்றுக்கணக்கான முருக பக்தர்கள் கலந்து கொண்டனர். பாதயாத்திரை பருத்தித்துறை நகரினை சென்றடைந்து பின்னர் A9 வீதி வழியாக கிளிநொச்சியை சென்றடைந்து பின்னர் வற்றாப் பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் உற்சவத்தில் கலந்து கொண்ட பின் பா[illegible]வுள்ளது.





(படங்கள்| [illegible] மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 346
Viber 076 636 3378



# நாட்டுக்கு நல்ல தலைவர்கள் கிடைக்கவில்லை

**சிங்கப்பூருடன் ஒப்பிடும் போது இலங்கை மிகப் பெரும் வளத்தைக் கொண்டுள்ள நாடு. ஆனாலும் இன்றைய இலங்கையின் நிலை பிச்சைப் பாத்திரம் ஏந்தும் அளவில் இருக்கிறது.**

- அபிமன்யு

இலங்கை உட்பட தோல்வி கண்ட அரசுகளில் இருந்து கற்றுக் கொண்ட பாடமே சிங்கப்பூரை இன,மத,மொழி, பேதம் இல்லாத நாடாக வழிநடத்துவதற்கு தமக்கு உதவியதாக சிங்கப்பூரின் பிரதமர் மறைந்த லீ குவான் யூ ஒரு நேர்காணலில் தெரிவித்திருந்தார்.

அவர் கூறிய இந்த விடயத்தை நாம் சாதாரணமாய் எடுத்துவிட முடியாது.

கடந்த ஐம்பது வருடங்களுக்கு முன்பே இலங்கை ஆட்சியாளர்களின் பலவீனத்தையும் இன ரீதியான பாகுபாட்டையும் கூறுவதற்கு இதைவிட வேறு எந்த உதாரணத்தையும் கூறிவிட முடியாது.

அதைவிட ஐம்பது வருடங்களுக்கு முன்னரே ஆட்சியாளர்களிடம் இவ்வாறான இன, மத ரீதியிலான பாகுபாடு இருந்தது எனின், தற்போதைய நிலை எவ்வாறு இருக்கும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

காலனித்துவ ஆட்சியின் பின்னர் ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்றிய சிங்கள பேரினவாதிகள் இன ரீதியாகவும் மத ரீதியாகவும் பாகுபாடுகளை வளர்த்து அதில் தமது அரசியல் சுயலாபங்களை ஈட்டிக் கொண்டிருந்தனர், இருக்கின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மை ஆகிறது.

இலங்கை திருநாடு நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட ஒரு அழகிய தீவாகக் காணப்படுவதுடன் சிங்கப்பூர் போன்ற அதி உச்ச வளர்ச்சியடைந்த நாடுகள் இலங்கையை ஒத்த வளங்களைக் கொண்ட நாடுகளாகவே காணப்படுகின்றது.

சிங்கப்பூருடன் ஒப்பிடுகையில் இலங்கை வளங்கள், நிலப்பரப்பு என்ற ரீதியில் ஒரு படி மேலேயே இருந்தது.

ஆனால் அது இப்போது எங்கு நிற்கின்றது எனின், உலக நாடுகளிடம் உதவிக்கரம் நீட்டி பிச்சைப் பாத்திரம் ஏந்தும் நிலையில் உள்ளது என்று கூறிவிட முடியும்.


இவை எதனால் என்ற கேள்விக்கு லீ குவான் யூவின் பதில் விடையாகிறது.

அனைத்து வளங்களும் நிறைந்த ஒரு நாட்டை எவ்வாறு அபிவிருத்தி அடையும் நோக்கில் கொண்டு செல்லலாம் என்ற சிந்தனையை விடுத்து இன, மத பேதங்களை விதைத்த சிறுமைத்தனங்களே இலங்கையின் இன்றைய நிலைக்குக் காரணமாக அமைகின்றது.



இதற்கு பெரும்பான்மைச் சிங்களத் தலைவர்களே முழுப் பொறுப்புமாக இருக்கின்றனர் என்பதே பொருத்தமானது.

இதை ஒத்த கருத்து ஒன்றை நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிச் சொல்ஹெய்ம் அண்மையில் கூறியிருக்கின்றார். இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடந்த 2002 ஆம் ஆண்டு சமாதானத் தூதுவராகச் செயற்பட்டவர் நோர்வேயின் எரிக் சொல்ஹெய்ம்.




இவரை அறிந்திராதவர் எவருமாக இருக்க முடியாது. அவ்வளவுக்கு அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதானப் பாலமாகச் செயற்பட்டவர்.

அத்துடன் இலங்கையில் நிரந்தரத் தீர்வு வர வேண்டும் என்பதில் மிகத் தீவிரமாகச் செயற்பட்டவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தற்போது அவர் இலங்கை தொடர்பில் கூறியிருக்கும் கருத்து அனைவரையும் உன்னிப்பாகக் கவனிக்க வைத்துள்ளது.

ஆம், தொலைநோக்குடைய தலைமைத்துவத்தை வழங்கக் கூடிய தலைவர்கள் இலங்கைக்கு இன்னமும் கிடைக்கவில்லை என்பதே அவரின் கருத்து.

அவரின் குறித்த பேச்சில் பல தசாப்தகால நெருக்கடிகளுக்குப் பின்னரும் சிங்கள பௌத்தர்கள் ஆதிக்கம் செலுத்தும் கொள்கையினால் சிறுபான்மை இனமான தமிழர், முஸ்லிம்கள் பாதிக்கப்படுகின்றனர் என்றவாறு அவரின் கருத்து அமைந்திருந்தது.

இலங்கை அரசுடன் மிக நீண்டகாலம் இராஜதந்திரத் தொடர்புகளைப் பேணி வந்த,

இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானத் தூதுவராக செயற் பட்ட எரிக்சொல் ஹெய்ம் இலங்கையில் பல தலைவர்களுடன் பழகும் சந்தர்ப்பத்தை கொண்டிருந்தார். அவ்வாறான நிலையிலேயே அவர் இந்த விடயத்தைத் தற்போது தெரிவித்திருக்கின்றார்.

இது பலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தினாலும் இலங்கை ஆட்சியாளர்களுக்கு எவ்விதத்திலும் ஆச்சரியத்தை ஏற்படுத்தாது.

ஏனெனில் அவர்களிடம் இலங்கைத் திருநாட்டை கட்டியெழுப்பி அதை ஒரு ஸ்திரமான நாடாக மாற்றும் எண்ணம் எள்ளளவும் இல்லை.

மாறாக எவ்வாறு இனங்களுக்கிடையில், மதங்களுக்கிடையில் பூசல்களை ஏற்படுத்த முடியும் என்ற சிந்தனையே அவர்களிடம் மேலோங்கிக் காணப்படுகின்றது.

இதைப் பறைசாற்றும் விதமே இலங்கையின் தற்போதைய நிலை உணர்த்தி நிற்கின்றது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்ஷ அரசின் மாற்றுக் கொள்கைகளே காரணம் எனக் கூறிக் கொண்டாலும் உண்மையில் இலங்கைத் திருநாட்டின் இந்த நிலைக்கு காலனித்துவ ஆட்சியின் பின்னர் வந்த சிங்கள பேரினவாத சக்திகள் காரணம் என்பதே மிகப் பொருத்தமானது.

ஏனெனில் கிட்டத்தட்ட 50 வருடங்களுக்கு முன்னர் சிங்கப்பூரின் பிரதமர் லீ குவான் யூவின் தீர்க்கதரிசனமும் தற்போது நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல் ஹெய்ம் அவதானித்து கூறிய. விடயமும் ஒன்றுபட்டதாகக் காணப்படுகின்றது.

இனங்களுக்கிடையிலும் மதங்களுக்கிடையிலும் புரிதலை ஏற்படுத்தி உறுதி மிக்க நாடாக இலங்கையை மாற்ற ஒரு நல்ல தலைவர் இன்னமும் உருவாகவில்லை என்ற ஏக்கம் இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் உண்டு என்பதே முடிவாகிறது.

"தலைவர்கள் பிறப்பதில்லை உருவாக்கப்படுகின்றார்கள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் நிலவிய மௌனத்தைக் கலைக்க விதானையார் விஸ்வலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:** பாரத லக்ஷ்மன் கொலையில நீதிமன்றத்தால மரண தண்டனை விதிக்கப்பட்ட துமிந்த சில்வாவிற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொது மன்னிப்பு வழங்கினவர்.

ஆனால் அதனை எதிர்த்து பாரத லக்ஷ்மன்ர மனைவியும் மகளும் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கில, ஜனாதிபதி வழங்கிய பொது மன்னிப்புக்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருக்குது.

**கங்காணி:** அதுமட்டுமல்ல விதானையார், துமிந்த சில்வாவை உடனடியாகக் கைது செய்யுமாறு நீதிமன்றம் விதித்த உத்தரவும் நடைமுறைப்படுத்தப்பட்டாயிற்று.

**பண்டிதர்:** மிருசுவில் படுகொலையோட சம்பந்தப்பட்டவர்களுக்கும் நீதிமன்றம் மரண தண்டனை வழங்க, ஜனாதிபதி கோட்டாபய அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்தவரல்லோ. அப்ப அவர்களையும் தானே கைது செய்ய வேணும்.

**விதானையார்:** பண்டிதர் சொல்லுறது சட்டப்படி சரி. ஆனால் அது தொடர்பில நாங்கள் மனுத்தாக்கல் செய்யவல்லோ வேணும்.

**மூப்பர்:** தமிழர் அரசியலில இருக்கக் கூடிய சட்டத்தரணிகள் இது தொடர்பில ஏன் நடவடிக்கை எடுக்கல்ல.

**சாத்திரியார்:** எங்களுக்குப் பிரச்சினை ஆரியகுளம் திருத்தினது சரியா, பிழையா எண்டதல்லாது மிருசுவில் படுகொலையோட சம்பந்தப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டதல்ல.

**விதானையார்:** உண்மைதான். இலங்கையில நல்ல தலைவர்கள் இல்லை எண்டு முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல் ஹெய்ம் கூறியிருந்தவர். அவற்ற அந்தக் கருத்து, தமிழர் தரப்பிலும் சிறந்த அரசியல் தலைவர்கள் இல்லை என்பதுதான் பொருள்.

**சிறாப்பர்:** தமிழ் மக்களுக்குச் சிறந்த அரசியல் தலைவர்கள் இருந்திருந்தால், எங்கட பிரச்சினைக்கு எப்பவோ தீர்வு கிடைத்திருக்கும்.

இப்ப இருக்கிற தமிழ் அரசியல் தலைவர்களில யாரை நம்புறது யாரை நம்பாமல் விடுகிறதென்பதே தெரியாமல் இருக்குது.

**வாத்தியார்:** நாறிப்போன எங்கட அரசியலை விட்டிட்டு பொருளாதார நெருக்கடியில இருந்து எங்கட மக்களை எங்ஙனம் காப்பாற்றுவது எண்டு சிந்திக்கிறதுதான் இப்ப நல்லதெண்டு நான் நினைக்கிறன்.

**கங்காணி:** அதுவும் சரிதான். நாட்டில மிகப் பெரிய பஞ்சம் பட்டினி ஏற்படப் போகுது. எனினும் அதுபற்றிச் சிந்திப்பதற்கு இஞ்ச ஒருத்தரும் இல்லை.

**விதானையார்:** எங்கட அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் உயர் வர்க்கத்தோட தானே புளங்குகினம். ஏழை மக்களைப் பற்றிச் சிந்திப்பதற்கு ஒருத்தர் இல்லை.


**மூப்பர்:** விதானையார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. இந்தாப் பாருங்க மண்ணெண்ணெய் இல்லாததால கடற்றொழிலாளர்கள் தொழிலுக்குப் போக முடியவில்ல. அன்றாடம் மீன் பிடித்துச் சீவியம் நடத்துகிற கடற்றொழிலாளர்களின்ர நிலைமை எப்படி இருக்கும்.

இதேபோல விவசாயிகளுக்கு உரமும் இல்லை. மண்ணெண்ணெயும் இல்லை எண்டால் அந்த விவசாயிகள் என்னதான் செய்ய முடியும்.

**வாத்தியார்:** எரிவாயு விடயத்தில எங்கட யாழ்ப்பாண அரசாங்க அதிபர் மகேசன் ஐயா அதிரடியாக அமுல்படுத்தின பங்கீட்டு முறையில எல்லாக் குடும்பங்களுக்கும் காஸ் கிடைக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்குது. இதற்காக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கும் பிரதேச செயலர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நாங்கள் நன்றி சொல்ல வேணும்.

**சாத்திரியார்:** வாத்தியார் நாட்டில ஏற்படப் போகும் பஞ்சத்தில இருந்து எங்கட மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு வீட்டுத் தோட்டங்களை அமைக்க வேணும் எண்டு சொல்லுகினம். ஆனால், வீட்டுத் தோட்டத்திற்குத் தேவையான கத்தரி, புடோல், வெண்டி நாற்றுக்களைக் எடுக்கிறதும் விதைகளை வாங்கிறதும் முடியாத காரியமாக இருக்குது.

**சிறாப்பர்:** சாத்திரியார் சொல்லுறதுதான் யதார்த்தம். எல்லாரும் வீட்டுத் தோட்டம் செய்யுங்கோ எண்டு கோசம் போடுகினம். ஆனால் அதற்குரிய ஏதுக்கள் ஒண்டும் இல்லை.



# சீட்ஸ் விற்கிற இடத்திற்கு செல்வதே பெரும்பாடு...

திருநெல்வேலியில சீட்ஸ் விற்கிற இடம் இருக்குது. அந்த இடத்தைத் தேடிக் கண்டு பிடிக்கிறதுக்கு பலாலி வீதியால பத்துத் தடவையாவது ஓடித் திரிய வேணும். இந்த இடத்தால போனால் ஆபத்தாகி விடுமோ எண்டு மனம் நினைக்கிற இடத்திலதான் சீட்ஸ் விற்கிற கந்தோருக்குப் போக வேணும். அப்படி ஒரு பாதையைத் தேடிப் பிடித்துப் போனாலும் அங்கயும் ஒண்டும் இல்லை.

**சாத்திரியார்:** என்ர அனுபவம் சிறாப்பருக்கும் ஏற்பட்டிருக்குது போல. நானும் கனடாவால வந்தவுடன திருநெல்வேலி விவசாயத் திணைக்களத்துக்குப் போய் மரக்கறி விதைகள் கேட்டன். அவையள் சீட்ஸ் விற்கிற இடத்துக்குப் போங்க எண்டு சொன்னவியள். எங்க! சீட்ஸ் விற்கிற இடத்தைக் கண்டு பிடிக்கப் பெரும் பாடாயிற்று.

அப்ப நினைச்சன் மக்கள் இலகுவாக இனங்காண வேண்டிய சீட்ஸ் விற்பனை நிலையத்த கோடிக்குள்ள கொண்டு போய் வைச்ச எங்கட அதிகாரிகளின்ர மன நிலை எப்படி இருக்குமெண்டு.

ஆகையால இவையளை நம்பி வீட்டுத் தோட்டம் செய்ய ஏலாது.

**கங்காணி:** அப்ப என்னதான் செய்யலாம்.

**சாத்திரியார்:** வசதி படைத்தவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் இது விடயத்தில இறங்கி, உணவுத் தானியங்கள், மரவள்ளி செய்கை போன்றவற்றை ஊக்குவிக்க வேணும்.

அதற்குத் தேவையான தானியங்களை இலவசமாக வழங்குகிற ஏற்பாடுகளும் இருக்க வேணும். இது விடயத்தில எங்கட புலம் பெயர் தமிழ் உறவுகளும் வெளிநாடுகளில இருக்கிற புலம்பெயர் அமைப்புகளும் தாராளமாக உதவி செய்ய வேணும்.

**பண்டிதர்:** அப்ப; சாத்திரியார் சொன்னதை நாங்கள் ஆலடியில ஒரு தீர்மானமாக நிறைவேற்றுவம்.

இவ்வாறு பண்டிதர் கூற, அதனை அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ள அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் வெற்றி பெற்ற மனிதரா?

''பணம், புகழ் மற்றும் அதிகாரம் இல்லாமல் செல்வாக்கு மிக்க நபராக உருவெடுப்பது எப்படி என்று நீங்கள் கேட்கலாம். இந்த மூன்று மட்டுமே வெற்றிக்கான அடையாளம் இல்லை. இந்த உலகம் இதுவரை வெற்றி என்று எதைச் சொல்கிறதோ, அதெல்லாம் வெற்றிக்கான அறிகுறி இல்லை. ஒருவர் மில்லியன் டொலர் சம்பாதித்தபின், அவர் வெற்றி பெற்று விட்டார் என்று பெருமைப் பட்டுக் கொள்ளலாமா அல்லது பணியிடத்தில் உயர்ந்த பதவியைப் பெற்று விட்டாலோ, ஒரு பவர்புல்லான நபராக ஆகிவிட்டாலோ வெற்றி பெற்றதாக அர்த்தமாகிவிடுமா...

நம்முடைய ஆழ்மனதுக்கு இவையெல்லாம் வெற்றி இல்லை என்று நிச்சயமாகத் தெரியும். ஆனாலும், இதை நோக்கித்தான் நாம் பயணிக்கிறோம். பெரிய அளவிலான சம்பள உயர்வு, பெரிய கார், பங்களா போன்றவற்றை மனதில் கொண்டே நாம் அன்றாடம் இயங்குகிறோம். இந்த விடயங்கள் எல்லாம் கிடைக்காமல் போகும்போது ஏக்கம், மன அழுத்தம், விரக்தி, முழுச்சோர்வு ஆகிய விடயங்கள் தான் நமக்குக் கிடைக்கிறது.

இந்த நெகட்டிவ்வான விளைவுகளில் இருந்து நாம் தப்பிக்க வேண்டுமெனில், வெற்றி குறித்த நம்முடைய எண்ணங்களை (கலாசாரத்தில் ஊறிப்போய் இருக்கும் தவறான எண்ணம்) நாம் முழுமையாக மாற்றியாக வேண்டும். வெற்றி என்றால் என்னவென்று நாம் நம்முடைய மனதினுள் வரையறுத்து வைத்திருக்கிறோமோ, அதை நாம் மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும்.

இப்படி மாற்றி அமைக்கப்பட்ட வெற்றி குறித்த நம்முடைய வரையறை (Definition), நம்முடைய வாழ்வை சிறப்பானதாக்குவதுடன், நாம் அழியாததொரு தாக்கத்தை இந்த உலகில் ஏற்படுத்திச் செல்லவும் வழிவகை செய்யும்

இதில் என்ன கொடுமை எனில், இன்றைக்குக் குழந்தைகளும் கூட இந்த மனநிலைக்கு ஆட்பட்டுவிடுகிறார்கள் என்பது தான். குழந்தைகள் யூடியூப் ஸ்டார் ஆக வேண்டும் என நினைக்கிறார்கள். அதற்காக அவர்கள் வீடியோ எடுத்து யூடியூபில் பதிவேற்றுகிறார்கள். அவர்கள் அப்படிச் செய்வதில் தவறில்லைதான். அவர்கள் சொல்லும் விடயங்கள் யாருக்கோ பயனுள்ளவையாக இருக்கலாம் இல்லாமலும் போகலாம். பயனுள்ள, ரசிக்கத்தக்க வீடியோக்கள் வைரலாகவும் வாய்ப்புள்ளது.

ஆனால், வைரலாக வேண்டும் என்று எதிர்பார்த்து வீடியோ எடுத்தால் என்ன ஆகும்? அப்படி நினைத்து எடுக்கப்படும் வீடியோக்களில் அர்ப்பணிப்பு இருக்காது. தவிர, மிகுந்த எதிர்பார்ப்புடன் எடுக்கப்படும் இது போன்ற வீடியோக்கள் வைரலாகவில்லை எனில், வெற்றி பெறவில்லையே என்ற ஏக்கமும் அதிருப்தியுமே தோன்றி மகிழ்ச்சியைக் குலைக்கும். மன மகிழ்ச்சிக்காக செய்கிற ஒரு விடயமே கடைசியில், மகிழ்ச்சியைக் குலைக்கிற மாதிரி ஆகிவிடுவது எவ்வளவு முரண்

''மேலே கூறிய அனைத்தும் சுலபமாகப் பின்பற்றக்கூடியதாக இருக்கிறது அல்லவா? பின் ஏன் ஒரு சிலரே இந்த நடை முறையைப் பின்பற்றுகின்றனர்? ஏனெனில், இந்த நடை முறையைப் பின்பற்றுவது சுலபமில்லை. மனிதன் பிறந்ததில் இருந்தே சுயநலம் கொண்டவன். தனக்கு என்ன கிடைக்கும் என்பதைப் பற்றி நினைத்தே நாட்களைக் கழிப்பவன். பிறந்த குழந்தை பால் கிடைக்கும் வரை அழுகிறது. வளர வளரக் கேட்பது கிடைக்கும் வரை அடம் பிடிக்கிறது. ஆனால், ஒரு முழு மனிதனாக உருவெடுத்த பின்னால், மற்றவர்களுக்கு உதவியாக இருப்பது எப்படி என்று சிந்தித்து வாழுங்கள் என்று சொன்னால், அது எப்படி சாத்தியமாகும்? எனவே, நீங்கள் இந்த உலகம் புகட்டும் வெற்றி என்ற தவறான பாதையை விட்டுவிட்டு, இந்தப் புத்தகம் சொல்லும் கருத்துகளைப் பின்பற்றி வாழ்ந்தால், புது மாதிரியான ஊக்கம் நிறைந்த வாழ்க்கையை வாழ்வீர்கள்.





# கிண்ணம் வென்றது குஜராத்

ஐ.பி.எல் 2022 தொடரை வென்றிருக்கிறது குஜராத் டைட்டன்ஸ். ரசிகர்கள், விமர்சகர்கள் என ஒவ்வொருவராலும் புறக்கணிக்கப்பட்ட அந்த அணி, தங்கள் முதல் சீசனிலேயே வரலாறு படைத்திருக்கிறது.

பெப்ரவரி இரண்டாவது வாரம், ஐ.பி.எல் 2022 தொடருக்கான ஏலம் முடிந்தபோது குஜராத் டைட்டன்ஸ் மீது பெரும் விமர்சனம் வைக்கப்பட்டது. 10 அணிகளிலேயே அதுதான் மிகவும் பலவீனமான அணி என்று கருதப்பட்டது. ரஷீத் கான், முகமது ஷமி, லாகி பெர்குசன் என பந்துவீச்சு பலமானதாக இருந்தாலும், பட்டிங் சுமாராகவே இருந்தது. ஹர்திக் பாண்டியா, சுப்மன் கில் தவிர்த்து நம்பிக்கை கொடுக்கக்கூடியவர்கள் யாரும் இருக்கவில்லை. இத்தனைக்கும் மேல், அந்த அணியின் கப்டனாக அறிவிக்கப்பட்டிருந்தவர், அதுவரை பெரிய அனுபவம் கொண்டிராத ஹர்திக். ஆனால், எதெல்லாம் அவர்களின் மைனஸாகப் பேசப்பட்டதோ, அதையெல்லாம் வைத்தே இந்தத் தொடரை வென்றது குஜராத். வென்று காட்டினார் கப்டன் ஹர்திக்!

இந்த சீசனில் பல அணிகள் தடுமாறக் காரணமாக இருந்தவர்கள் அந்த அணிகளின் கப்டன்கள்தான். ரவீந்திர ஜடேஜா, ரோஹித் ஷர்மா, கேன் வில்லியம்சன், மயாங்க் அகர்வால் என அனைவருமே தங்கள் அணியின் காலை வாரினர். அதேசமயம், தன் அணியை முன்னால் நின்று வழிநடத்தினார் ஹர்திக்.

சீனியர் வீரர்கள் மீது நம்பிக்கை வைத்தது, தைரியமான முடிவுகள் எடுத்தது என கப்டனாக சென்டம் ஸ்கோர் செய்திருக்கிறார் அவர். 'இவர் அவ்வளவுதான்' என அனைவராலும் கருதப்பட்ட டேவிட் மில்லரை தங்கள் அணியின் டிரம்ப் கார்டாகப் பயன்படுத்தினார். டாஸ் வென்ற ஒவ்வொரு கப்டனும் பௌலிங்கையே தேர்வு செய்துகொண்டிருந்தபோது தைரியமாக முதல் ஆளாக பட்டிங்கைத் தேர்வு செய்தார், ஆடுகளத்தின் தன்மை காரணமாக 10 கோடி ரூபாய் கொடுத்து எடுத்த பௌலரை வெளியே அமரவைக்கவும் தயாராக இருந்தார்.

கப்டன்சி மட்டுமல்லாமல் பட்டிங், பௌலிங் என அனைத்து ஏரியாவிலும் அணிக்குக் கைகொடுத்தார் ஹர்திக். கடந்த சில ஆண்டுகளாக மும்பை இந்தியன்ஸுக்குப் பெரிதாக ரன் சேர்க்காத இவர்தான், குஜராத் டைட்டன்ஸின் டாப் ஸ்கோரர். அணிக்குத் தேவை என நம்பர் 3, நம்பர் 4 என எல்லா பொசிஷன்களிலும் ஆடினார். தன் பந்துவீச்சால் பைனலின் ஆட்ட நாயகன் விருதையும் வென்று அசத்தினார். அதிர்ஷ்டம் கைகொடுக்கிறது என்று அவரே ஒருகட்டத்தில் சொல்லியிருந்தாலும், அந்த அதிர்ஷ்டத்தின் உருவமாக இருந்தது இவர்தான்!

நம்பிக்கை வைத்த வீரர்கள் எல்லோருமே சிறப்பாக ஆடியது, இதுநாள் வரை தடுமாறிய வீரர்கள் ஒரே நேரத்தில் தங்கள் பழைய பார்முக்குத் திரும்பியது என ஒன்பது கோள்களும் குஜராத் டைட்டன்ஸுக்காக நேர்க்கோட்டில் நின்றன. அந்த அணியும், தங்கள் சொந்த மண்ணில் திரண்டிருந்த ஒரு லட்சம் ரசிகர்களுக்கு மத்தியில் அந்தக் கோப்பையை உயர்த்திப் பிடித்திருக்கிறது.

**மீண்டு வருவார்களா சம்பியன்கள்!**

ஒரு புதிய அணி சம்பியன் பட்டம் வென்றிருக்கும் இந்த சீசனில், 9 முறை ஐ.பி.எல் கோப்பையை வென்ற மும்பை இந்தியன்ஸ், சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் கடைசி இரண்டு இடங்களைப் பிடித்து பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றன. இந்த ஏலத்தின்போது குஜராத்தைப் போல் இந்த இரு அணிகளும்கூட விமர்சனத்துக்குள்ளாகின. ஆனால், இவர்களால் குஜராத் போன்று சிறப்பாகச் செயற்பட முடியவில்லை. முக்கிய வீரர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் அவர்களை முடக்கிவிட்டன.

தோனி அடுத்த சீசனில் விளையாடுவார் என்பதே சென்னை சூப்பர் கிங்ஸ் ரசிகர்களுக்கு டானிக். மஹீஷ் தீக்சனா, மதீஷா பதிரனா, முகேஷ் சௌத்ரி போன்ற வீரர்கள் நம்பிக்கையை விதைத்திருக்கிறார்கள். 2022 சீசன் என்றொன்று இருந்ததை முற்றிலுமாக மறந்துவிட்டு, பழைய ஓல்ரவுண்டராக ஜடேஜா இணைந்தால் நிச்சயம் விசில் பறக்கும்.

அடுத்த சீசனுக்கு முன்பு நடக்கும் மினி ஆக்ஷனுக்கு முன் இந்த இரு அணிகளும், ஏதோவொரு ஜாம்பவானை ரிலீஸ் செய்துவிட்டு, புதிய சூப்பர் ஸ்டாரை ஒப்பந்தம் செய்யக்கூடும். நிச்சயம் ஒரு சம்பியன் அணியின் உத்வேகத்தோடு இந்த அணிகள் அடுத்த சீசனில் களமிறங்கும். ஒரு மோசமான சீசனுக்குப் பிறகு கிண்ணத்தை வெல்வது இந்த அணிகளுக்குப் புதிதில்லை. 2023 ஐ.பி.எல் கிண்ணத்தை தோனியோ, ரோஹித்தோ தூக்கினால் நாமும் ஆச்சரியப்படப் போவதில்லையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## மன்னாதி மன்னன்

தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமன் மீண்டும் மரத்தின் மீது ஏறி அங்கு தொங்கும் உடலைக் கீழ வீழ்த்தினான். பின்னர் இறங்கி அதனைச் சுமந்து கொண்டு அவன் மயானத்தை நோக்கி செல்கையில் அதனுள்ளிருந்த வேதாளம் எள்ளி நகைத்து "மன்னனே! நீ ஏதோ ஒரு மாபெரும் வேலையை மேற்கொண்டு இந்த பயங்கர நள்ளிரவில் சிரமப்படுவதாகத் தெரிகிறது. சில சமயங்களில் ஒரு வேலை முடிவடையும் நிலையில் இருக்கும் போது மிகச் சிறந்த அறிவாளிகள் கூட அதுவரை தாம் கடைப்பிடித்து வந்த கொள்கையைக் கைவிட்டு விடுகிறார்கள். இதனால் அவர்கள் விரும்பிய பலன் கிட்டாமலேயே போய் விடுகிறது. இதற்கு உதாரணமாக அமுதன் என்பவனின் கதையைக் கூறுகிறேன். கவனமாகக் கேள் என்று கூறிக் கதையை சொல்லலாயிற்று.



வெகு காலத்திற்கு முன் மதுப்புரி என்ற நாட்டை மானசிம்மன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனது ஆட்சி ஊழல் மிக்கதாக இருந்தது. அதனால் திறமைசாலிகளுக்கு அரசாங்கப் பதவிகள் கிடைக்கவில்லை. மக்கள் செலுத்தும் வரிப் பணம் அவர்களுக்குப் பயன்படாமல் அதிகாரிகளின் சட்டைப் பைகளுள் போனது.

இதனால் பொக்கிஷத்தில் பணம் இல்லாது போகவே மன்னன் வரிகளை உயர்த்தினான். அதனால் ஓரளவு நிலை திருந்தினாலும் மறுபடியும் பணத் தட்டுப்பாடு ஏற்பட மீண்டும் வரிகள் அதிகரிக்கப்பட்டன.

அந்த நாட்டில் தாராபுரி என்ற ஊரில் அமுதன் என்ற அறிஞன் இருந்தான். அவன் எந்த சிக்கலான பிரச்சினைக்கும் எளிதில் வழி கண்டு வந்தான். நாட்டில் பஞ்சம் தலைவிரித்தாடி விலைவாசிகள் உயர்ந்து மக்கள் அவதிப்பட்டனர். மக்களால் வரி செலுத்த முடியவில்லை. நாளுக்கு நாள் நிலைமை மோசமாகிக் கொண்டே போயிற்று. அதிகாரிகள் எதனையும் கண்டு கொள்ளாமல் தாம் பணம் சம்பாதிப்பதிலேயே குறியாக இருந்தார்கள். இதற்கு ஒரு வழி காண, அமுதன் தலைநகருக்குச் சென்றான்.

மன்னனைக் காண வேண்டும் என்றால் ரமணன் என்ற அதிகாரியை முதலில் சந்தித்தாக வேண்டும். அவனைப் பார்க்கவே அவன் வீட்டுக் காவலாளிகள் இருவருக்கு இரண்டு வராகன்கள் லஞ்சம் கொடுக்க வேண்டும்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## சுந்தர காண்டம்




"சிறந்த என் மாமியர்க்குச் "சீதை இறக்கும்போது உங்களைத் தொழுதாள் என்ற செய்தியை இராமன் என்பால் அருள் இல்லாத காரணத்தால் மறந்தாலும் நீ சொல்ல மறக்க வேண்டாம்".

"அரசனாய்ப் பிறந்ததால் உரிமை கொண்டு மற்றொரு தாரத்தை அவன் மணக்க நேரிடலாம்; அதனைத் தடுக்க முடியாது, என்றாலும், மறுதாரம் மனித இயல்பு படி குற்றம் என்பதை அவனுக்குச் சாற்று. எழுதாத சட்டம் அவனைத் தடுத்து நிறுத்தும்; அதில் எனக்கு நம்பிக்கை உண்டு; அவன் அதீத ஆடவன் என்பதை என்னால் மறக்க முடியாது". "என்னைக் கரம் பிடித்து மணந்த நாளில் "இந்த இப்பிறவியில் இருமாதரைச் சிந்தையாலும் தொடேன்" என்று எனக்குத் தந்த வரத்தை எடுத்துச் சொல்க" என்று கூறி, இராமன் ஓர் இலட்சிய புருஷன் என்பதை வற்புறுத்தி அறிவுறுத்தினாள். "அரசு இருந்து ஆளவும், வீரசு கோலங்கள் பூண்டு அவனோடு உடன் வீற்றிருக்கவும் யான் கொடுத்து வைக்கவில்லை; [illegible] என்னைச் சதி [illegible] விட்டது" என்று கழிவிரக்கமாய் உருகி உரைத்தாள். தூதுவன் என்ற எல்லையை மீறித் தான் ஓதிய கருத்தை நினைத்து அனுமன் வருந்தினான்; பெண்மை பேசும் நல்லுரைகள் அவன் நெஞ்சைக் குளிர்வித்தன. "இராமனிடம் சொல்ல நினைக்கும் செய்தி கள் உளவோ?" [illegible] தான் அவ்வாள் என்று சொல்லி என்னை ஓரம் கட்டலாம்; அதற்காகத் தன் வீரம் காட்டாமல் இருப்பது அவன் ஆண்மைக்கு இழுக்கு" என்பதை நினைவுறுத்துக" என்றாள். "வாழ்வதா வீழ்வதா? என்பது தான் என் வாழ்க்கைப் பிரச்சினை" என்றாள்.

"நம்பிக்கை என்னை வாழ வைக்கலாம்; அதற்கும் ஓர் வரையறை உண்டு; திங்கள் ஒன்று இங்கு இருப்பேன்; அது தீர்ந்தால் என் உயிரை மாய்ப்பேன்" என்று உறுதியாய்க் கூறினாள்.

"என்னைப் பற்றியே நான் பேசுவதும், அதனால் அவரை ஏசுவதும் தவறுதான்; அவரை நம்பி நான் ஒருத்திதானா உயிர் வாழ்கிறேன்?" "பட்டம் கட்டிக் கொண்டு அவர் பாரினை ஆள உலகம் அவரை எதிர்நோக்குகிறது; தாய்ப் பாசம் அவரை இழுக்கிறது.

பரதன் அழுகை அவரை அழைக்கிறது; அவர் யாருக்காக வாழ்வது? கரை கடந்து தவிக்கும் என் துயருக்குக் கறை காண முடியாது; கரையைக் கரைக்க அவருக்கு அக் தறை பிறக்கும் என்று எதிர்பார்க்க முடியாது."

"உற்ற கணவன் என்னைத் துறந்து கைவிட்டாலும் பெற்ற தந்தை என்னை நினைந்து அழாமல் இருக்க மாட்டார்; அவருக்கு என் இறுதி வணக்கத்தை இயம்புக"

"உன் தலைவன் சுக்கிரீவனுக்கு இந்தச் செய்தியைச் சொல்லுக! சுந்தரத் தோழனுக்கு மணி முடி சூட்டி அழகு பார்க்கச் சொல்; மாலை சூட்டி மகிழச் சொல்" என்று கண்களில் நீர் மல்கத் தன் இறுதிச் செய்தியைச் சொல்லி அனுப்பினாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



21 ஆவது திருத்தச்சட்டம் மூலம் பாரா ளுமன்றில் நிறைவேறுமோ வியாசரே?

**விஜயரட்ணம் யாழ்ப்பாணம்**

**மற்றவர்களைக் கொண்டு பௌத்த மதக் கொடிகளை ஏற்ற வைப்பது நியாயமானதா வியாசரே?**

மதச் சுதந்திரம் என்பது கட்டாயமானது. ஒருவர் தனக்குப் பிடித்த மதத்தை பின்பற்ற இங்கு சட்டம் அனுமதிக்கின்றது.

ஆனால் அதே மதத்தை திணிக்கும் செயல் நடக்குமாக இருந்தால் அதைப் போல் மனித உரிமை மீறல் வேறு எதுவும் இல்லை.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் தமிழர் பிரதேசங்களில் புத்தர் குடி கொண்டு தான் இருக்கிறார்.

இதுவும் மனித உரிமை மீறும் செயல் என்பது ஏனோ புரிய வேண்டியவர்களுக்கு புரியவில்லை.

**மதுவன் மீசாலை**

**தமிழகத்தின் உதவிப்பொருட்களால் என்ன பலன் வியாசரே?**

இராமயணத்தில் இராமரை சந்திக்க இராம னின் நண்பன் வேடுவன் குகன் வருகி ன்றான். இராமனுக்கு குகன் தேனில் ஊற வைத்த மீனைக் கொடுக்கிறான்.

பிராமணரான இராமர் அதை வேண்டாம் என்று தட்டிக்கழிக்காமல் எனக்கு மீன் என்றால் பிடிக்கும் அதிலும் தேனில் ஊற வைத்த மீன் என்றால் மிகப் பிடிக்கும் என்று இன்முகத்துடன் வாங்குகின்றார்.

குகன் மகிழ்வடைகின்றான்.

எமக்காக வழங்கப்பட்டது எப்படி இருந்தால் என்ன அதில் தமிழ் நாட்டு மக்களின் அன்பு இருக்கிறது அல்லவா அதை அன்போடு பெறுவோமே.

**தமிழ் யாழ்ப்பாணம்**

**உணவுப் பஞ்சம் வரப்போகிறது என அனைவரும் அறிவுறுத்துகின்றனர். நாம் இப்போது என்ன செய்ய வேண்டும்?**

இப்போது நாம் ஆடம்பரச் செலவுகள் செய்வதை தவிர்ப்பது மிகச் சிறந்தது.

உணவுப் பஞ்சம் தோன்றுமாக இருந்தால் அங்கு உணவுக்கான போர் ஆரம்பமா கியே தீரும்.

அது கொலை, கொள்ளை என்பவற்றை இன்னும் மலிய வைப்பதாகவே அமையும்.

நாம் உணவை மிகச் சிக்கனமாக பயன் படுத்தக் கற்றுக்கொள்வோம்.

முடிந்தவரை ஒரு சோற்றுப் பருக்கையை கூட குப்பையில் வீசாமல் இருக்கக் கற்றுக் கொள்வோம்.

வீட்டுத் தோட்டங்களை உடன் உருவாக்கி எமக்குத் தேவையானதை நாமே உற்பத்தி செய்து பயன் பெறுவோம்.




அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை

**021 567 1532**

என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள் அல்லது ஆசிரியர், வியாசர் பதிவுகள், வலம்புரிப் பத்திரிகை, இல.03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

**குமார் யாழ்ப்பாணம்**

**வியாசரே தங்களின் பதிலுக்கு ஒரு வாரம் காத்திருக்க வேண்டி உள்ளதே கேள்விகள் அவ்வளவு கடினமோ?**

எங்கே கேள்விகள் உருவாகின்றனவோ அங்கே தீர்வுகள் பிறக்கின்றன.

பிரச்சினைகளுக்கு தீர்வாக கேள்விகள் இருக் கும் என்றால் அந்தத் தீர்வுக்கான பதில்களு க்கு ஒரு வாரம் என்ன பல வருடங்கள் கூட காத்திருக்கலாமே மிஸ்டர் குமார்.

என்ன செய்வது தம்பி ஒவ்வொரு நாளும் பதில் எழுதினால் எனது நிலை என்ன? பதில் கூறவேண்டியவர்களுக்கு கேள்வி களு க்கும் பதில் கூற அவகாசம் வேண்டும் அல்லவா?

**சிவம் வடமராட்சி**

**நாட்டில் இப்போது எல்லாப் பிரச்சினை யும் தீர்ந்து விட்டதா மாமா?**

அடப்போங்கையா. இந்தா எல்லாவற்றை யும் வெட்டி வீழ்த்துகிறேன் என்று கூறிக் கொண்டு கதிரையில் இருந்தவர் இனி இலங்கையை மீட்பது கஷ்டம் என்று புரா ணம் பாடத் தொடங்கி விட்டார்.

இதைப் புரியாமலா அவர் அந்தக் கதிரை க்கு வந்தார். அவர் வந்தால் எல்லாம் தீரும் என்றார்கள். [illegible] ஆரம்ப மாகிறது.



தமிழகத்தின் உதவிப்பொருட்களால் என்ன பலன் வியாசரே?

**சிவநேசன் சாவகச்சேரி**

**மக்கள் எழுச்சியைப் பார்த்து ஏதோ நடக்கப் போகிறது என பெரிதாக எதிர் பார்த்தோம். ஆனால் எதுவும் நடக்க வில்லையே?**

என்ன செய்வது அதைத்தான் நரிப்புத்தி கொண்டவர்கள் தடுத்து நிறுத்தி விட்ட னரே. அதிகாரிகளுக்கு கோபம் வந்தால் எப்படி இருக்கும் என்பதை பார்த்த எங்க ளுக்கு மக்களுக்கு கோபம் வந்தால் எப்படி இருக்கும் என்பதை பார்க்க முடிந்தது.

அந்த அருமையான தருணங்களை இல் லாமல் செய்த பெருமை நரிகளையே சாரும்.

சரி விடுங்கள். அந்தப் நெருப்புப்பொறி எங்கோ ஒரு மூலையில் அணையாமல் தான் இருக்கி றது என்பது இவர்களுக்கு புரியாத வரை சந்தோசமே!

**இதழினி புலோலி**

**தனக்குப் பசித்தாலும் தன்னை நாடி வருபவர்களுக்கு உபசரிக்கும் பண்பு ள்ள நம் நாட்டில் இன்று உப்புக்கு கூட வழியில்லாமல் போனது யாருடைய தவறு?**

தூர நோக்கு கொள்கை இல்லாத தலை வர்கள் எமது நாட்டில் இருக்கும் வரை எமக்கு மீட்சியே இல்லை.

இவர்களுக்கு தாங்கள் சகல அதிகாரங்க ளுடனும் இருக்க வேண்டும்.

அதற்காக இனங்களுக்கிடையேயும் மதங் களுக்கிடையேயும் ஏதாவது முரண்பா டுகளை ஏற்படுத்திக் கொண்டே இருப்பார் கள்.

இந்த கதிரை ஆசை பிடித்தவர்களால் வந்த வினையே இது.

**ராஜ் யாழ்ப்பாணம்**

**21 ஆவது திருத்தச்சட்டம் மூலம் பாரா ளுமன்றில் நிறைவேறுமோ வியா சரே?**

இரட்டைக் குடியுரிமை உடைய எவரும் பாராளுமன்ற செயற்பாடுகளில் ஈடுபட முடியாது என்பதை மிக முக்கியமாக கூறு வதுடன் ஜனாதிபதியின் அநேக அதிகாரங் களை குறைப்பதே 21 ஆவது திருத்தச் சட்ட மூலம்.

இது இப்போது அனைவருக்கும் பெருந் தலையிடியை ஏற்படுத்தி இருக்கிறது.

அட அப்படியென்றால் பசில் ராஜபக்ஷ பெட்டியைக் கட்ட வேண்டி வரும் அல் லாவா? பொறுத்திருந்து பார்ப்போம் நிறைவேறுமா இல்லையா என்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

**ஒருபுறம் அவுஸ்திரேலியப் புலனாய்வுத்துறை மறுபுறம் முகாமில் தனிவாழ்வு இன்னொரு புறம் வெளிக்காண்பிக்கமுடியாத குடும்பத்தின் பிரிவு என்று நீதன் ஒருகணம் கண்மூடிப்பார்த்தான். ஜகார்த்தா கடலில், மூழ்க முதல் தள்ளாடிய படகின் நினைவுகளாய் எண்ணங்கள் புரண்டன. தானும் அகுனா போல் மாறிவிடுவேனோ என்ற அச்சம் அவனுக்குள் ஒருகணம் தலைகாட்டிய போது...**

## வலி சொல்லும் தொடர்... 35

முகாமில் பணயக்கைதி நாடகத்தை நடத்திய அகுனாவினால் படர்ந்திருந்த பரபரப்பு ஒருவாறு ஓய்ந்தது. அகுனாவின் மனநிலை மற்றும் அவனது மருத்துவத் தேவைகள் அனைத்துக்கும் அப்பால், அவனை உயர் பாதுகாப்பு முகாமொன்றுக்கு மாற்றுவது என்று குடிவரவுத்துறை அமைச்சு அன்றைக்கே முடிவெடுத்தது.

அகுனா மறுத்தான். தனியாகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த "அல்பா கம்பவுண்ட்" அறையிலிருந்து ஓலமிட்டான். சுவர் அதிரக்குமுறி அழுதான். தனது அண்ணனைப் போல, விரைவில் தானும் செத்துவிடப்போவதாக அஞ்சினான்.

ஏகப்பட்ட முகாம் பாதுகாப்பு அதிகாரிகளின் துணையோடு அங்கு வந்த குடிவரவு அமைச்சின் அதிகாரிகள், அகுனாவுக்கு நிலைமையை எடுத்துக் கூறினார்கள்.

குழந்தைகள், பெண்கள் வசிக்கும் இந்த முகாமில், பணயக்கைதியாக அரசு அதிகாரியைப் பிடித்துவைத்து, அச்சத்தை ஏற்படுத்திய நபரை வைத்துப் பாதுகாப்பது முடியாத காரியம் என்று, பணிவாக எடுத்துக்கூறினார்கள். சிறிது காலம், சிட்னியிலுள்ள உயர்பாதுகாப்பு அகதிகள் முகாமிலிருந்து மனநல மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டு, மீண்டும் மெல்பேர்ன் முகாமுக்குத் திரும்பலாம் என்றார்கள்.

அகுனா முற்றிலும் குலைந்து போயிருந்தான். அண்ணனின் இறப்பினை ஜீரணிக்கமுடியாத நிலையில் உடைந்து கிடக்கும் தன்னிடம், குடிவரவு அமைச்சும் முகாம் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் எதை எதையோ எல்லாம் பேசுகிறார்களே என்று விறைத்துக்கிடந்தான், தன் உணர்வுகளைப் புரிந்துகொள்வதற்கு எந்தப் .பரிவையும் காண்பிக்காத அதிகாரத்தரப்பு, தங்களுக்கு முன்னுள்ள நிர்வாக அட்டவணையைக் காட்டிப் பேசிக்கொண்டிருப்பது, அவனுக்குள், மிஞ்சிக் கிடந்த நம்பிக்கை அனைத்தையும் வற்றிப்போகச் செய்தது. தனது சக அகதியொருவனை அழைத்து - தன் வலி தெரிந்த ஒருவனின் தோளில் சாய்ந்து - அழுதால் தன் துயருக்குச் சற்று ஆறுதலாயிருக்கும் போலிருந்தது.

"நீங்கள் சொன்னபடி எல்லாம் செய்கிறேன். நீதனை மாத்திரம் ஒருதடவை பார்க்க அனுமதிப்பீர்களா" கண்ணீர் வடிந்த கோடுகளோடு அகுனாவின் கன்னங்கள் நம்பிக்கை இழந்து துடித்தது. ஆனால், அந்த அறிகுறிகள் அனைத்தும் அவனது மன நலம் சார்ந்த பிரச்சினையென்றே குடிவரவுத் துறை அமைச்சு அதிகாரிகள் நம்பினார்கள்.

அறைக்குள் அழைத்து வரப்பட்ட நீதனும் அகுனாவும் என்ன செய்யப்போகிறார்கள் என்பதை, ஆறு சோடி அதிகாரிகளின் கண்களும் ஒரு கமராவும் உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டிருந்தன.

தளர்ந்தபடி எழுந்த அகுனா, நீதனை இழுத்து அணைத்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதான். சகலதையும் இழந்து வெற்றுடம்பாய் கிடந்த அகுனாவுக்கு, நீதனின் அணைப்பு அண்ணனின் அருகாமையை அள்ளி வார்த்தது போலிருந்தது.

இன்னொரு அகதியின் சருமம் தொட்டபோதுதான், தனது உணர்வுகளே மீண்டது போலிருந்தது அவனுக்கு. நீதனும் அகுனாவும் அல்பா கம்பவுண்டிலிருப்பவர்கள் என்பதைத் தாண்டி, இருவருக்குள்ளுமிருப்பது அகதிகள் என்ற உறவு மாத்திரம்தானே தவிர, வேறெதுவும் இல்லை. காலையில் தொலைக்காட்சியைப் பார்த்து அழுதுகொண்டிருக்கும் அகுனாவின் தோளில் தட்டி, நீதன் தேநீர் கொடுப்பான். சொல்லப்போனால், இருவரின் வாழ்க்கையையும் பற்றி இருவருக்குமே முழுதாகத் தெரியாது. இருந்தாலும், சொல்லத் தெரியாத பிணைப்பொன்று அவர்களுக்குள் இறுக்கமாக இருந்தது.

ஆதரவற்றுக் கிடக்கும் இந்த முகாமுக்குள் ஒவ்வொரு அகதியும் அவ்வாறானதொரு உறவினை, குறைந்தது யாராவது ஒரு சக அகதியிடமாவது எதிர்பார்க்கிறான். அதுவே, இந்த முகாமுக்குள் அவர்கள் ஒவ்வொரு நாளும் நம்பிக்கையுடன் கண் விழிப்பதற்கு ஒரு காரணமாக அமைகிறது.

அன்றைக்கு அகுனா, தன் தோள் மீது சிந்திய கண்ணீரும் அந்த அறை அதிர அழுத சத்தமும் நீதனுக்குள் பல மணிநேரம் எதிரொலித்துக்கொண்டிருந்தது. தன்னை யாரென்றே தெரியாதவனின் நம்பிக்கையை இவ்வளவு எடையில் சுமந்திருக்கிறோம் என்பதை எண்ணும்போது, நீதனுக்குள் இந்த முகாம் குறித்து பெரும் அச்சம் எழுந்தது.

தனது வாழ்வு, தான் உணராத தடத்தில் புரண்டுகொள்கிறதா என்ற சந்தேகம் சுரந்தது. தனது பிஞ்சுக் குழந்தையின் நினைவுகளையெல்லாம்கூட இந்த முகாம் கத்தரித்துவிடுமோ என்ற பீதி அவனைச் சூழ்ந்தது.

அனீஸா அவன் முன்தோன்றி ஆறுதல் சொல்வதுபோல, அவள் புன்னகையை உணர்ந்தான். அறைக்குத் திரும்பிய நீதன் அவள் படத்தை எடுத்து நெஞ்சோடு வைத்து அழுதான்.

ஒருபுறம், அவுஸ்திரேலியப் புலனாய்வுத்துறை மறுபுறம் முகாமில் தனிவாழ்வு இன்னொரு புறம் வெளிக்காண்பிக்கமுடியாத குடும்பத்தின் பிரிவு என்று நீதன் ஒருகணம் கண்மூடிப்பார்த்தான். ஜகார்த்தா கடலில், மூழ்க முதல் தள்ளாடிய படகின் நினைவுகளாய் எண்ணங்கள் புரண்டன. தானும் அகுனாபோல் மாறிவிடுவேனோ என்ற அச்சம் அவனுக்குள் ஒருகணம் தலைகாட்டிய போது, அனீஸை நினைத்துக்கொண்டான். ஒருநாள் ஓடிவந்து அணைக்கப்போகும் தன் குழந்தைகளின் புன்னகையை எண்ணிப்பார்த்தான். கடல் கடந்து மிதக்கும் நம்பிக்கையின் கீற்றுக்களை இழுத்து இழுத்து மனதில் ஒட்டிக்கொண்டான். வாழ்க்கை எவ்வளவு பெரிய இரக்கமற்ற மிருகம்.



ஜூனியர் விகடன்

அடுத்தநாள் அகுனா இல்லாத முகாம் விடிந்ததும், அல்பா கம்பவுண்டில் முதல்நாள் நடைபெற்ற சம்பவங்கள் பற்றித்தான் பேச்சாக இருந்தது. மதியம் சாப்பாட்டு மண்டபம் அகுனாவின் புதினங்களால் நிறைந்திருந்தது.

ஒரு சில அகதிகள், பாதுகாப்புக்கு நின்றுகொண்டிருந்த உத்தியோகத்தர்களிடமே நேரடியாகப்போய் கேட்டார்கள். "முகாமில் அசம்பாவிதம் விளைவித்தால், இங்கிருந்து உயர்பாதுகாப்பு முகாமுக்கு அனுப்பப்படுவீர்கள்" என்று உத்தியோகத்தர்கள் இறுமாப்பான பதிலைச் சொன்னார்கள். அகதிகள் புன்னகையோடு கடந்து போனார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாங்களும் மனிதப்பிறவிகள் தான்

பெண்ணென்றால் பேயும்
இரங்குமென்பர்- அவளைத்
தெய்வத்திருமகளென்பர்
குலவிளக்கென்பர்
அறிவுசார் ஞானப்
பெருந்தகைகள்-ஆனால்
இந்தக் கலியுகம் பெண்ணைத்
தெய்வமாக்க வேண்டாம்-ஒரு
மனித ஜீவனாகக் கூட
மதிக்க மறுக்கிறதே!
சில கயவர்களால்
இஷ்டத்திற்கு உரசவும்
பொழுது போவதற்குப் பரிகாசம் செய்யவும்
பயன்படும் பொழுதுபோக்கு கருவியாக
கண்காட்சிப் பொருளாக
பேருந்துகளிலும் பொது இடங்களிலும்
பெண் விளையாட்டுப் பொருளாக்கப்படுகிறாள்
ஆம் வார்த்தை ஜாலத்தில் போற்றிவிட்டு
செயல்முறையில் தூற்றுவதை என்னவென்பது?
வேண்டுகோள் ஒன்றுதான்
பெண்ணை தெய்வமாக்க வேண்டாம்
அவளை மனிதப் பிறவியாக மதியுங்கள்
சகோதரர்களே.

இ.இளமதி
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

## சிவந்த பூமி



செந்நிறமானது பூமி எங்கே தெரியுமா?
ஈழத்தின் முல்லையில்...
ஒன்றரை லட்சம் தமிழரின்
செங்குருதியால் செந்நிறமானது பூமி.

உழுதுண்டு வாழ்ந்த இனம் ஒரு வேளை கஞ்சிக்காய்
ஏங்கித் தவித்த போதும் கொத்துக்குண்டில்
கொத்தாய் மாண்ட போதும் செந்நிறமானது பூமி

கொத்து குண்டில் மட்டுமா மாண்டோம்.
இல்லை! இல்லை! பசியாலும்,தாகத்தாலும்,
காயத்தாலும்,வேதனையாலும்,
துக்கத்தாலும்,துயரத்தாலும்,
இப்படிச் சொல்லிக் கொண்டு போகலாம்.
ஈழத் தமிழன் மாண்ட விதங்களை– இதனால்
செந்நிறமானது பூமி

மாரியம்மன் கோவிலைப் பல்குழல் எரித்தது
இரட்டை வாய்க்கால் பிள்ளையாரும்
இடந்தேடி அலைந்தார்
சூசையப்பர் கோவில் சுக்குநூறானது– இதனால்
செந்நிறமானது பூமி

சத்தியமாய்ச் சொல்கிறேன்
அறமும் நீதியும் வெல்லுமென்ற
அன்றோர் வாக்கு உண்மையெனில்– விரைவில்
சிவந்த பூமி சிலிர்த்தெழும் அதுவரை காத்திருப்போம்.

எஸ்.ஈசன்
பலாலி மைந்தன்

## முள்ளிவாய்க்கால்

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
அலையெனத் திரள்வோம்
நினைவேந்தல் தினம் தினம் கொடிபடர
முன்னையநாள் பிரிவின் விவாதம்
முற்றுப்பெற்று முளைத்தது புதிய தளிர்
முற்றவெளித்திடலில் ஏற்றப்பட்டது தீபம்
மூவின மக்களும் தொழுதார்
பேரின வாதமில்லை
பெருமிதமும் இங்கில்லை
பேராவலோடு ஏற்றினர் தீபத்தை
நாளை எம் நாடு நலம் பெற நிலை பெற
வாழ்வினைத் தொலைத்து
சாவின் விளிம்பிலிருந்து மீண்டு
வரலாறு காண மீண்டெழுவோம்
இலங்கையெம் தாய்நாடு
ஆட்சியதிகாரம் அடங்காப்பற்று
அடியோடு ஒழிப்போம் இது ஜனநாயக நாடு
மாற்றான் முடிசூட விடோம்
மாற்றத்தைக் காணாமல் போராட்டத்தை விடோம்
முள்ளிவாய்க்காலில் உயிரினை
இழந்தவர்கள் எம் உறவுகள்
நேர்கொண்ட பார்வையால்
நேசிக்கின்றோம் இதனையே

அக்கராயன் கவியரசன் கே.ஜே.ரெக்ஸ்

## மௌனத்தின் தேடல்- 562




## மாறாத வாழ்க்கை

நம் நாட்டில் அன்று குண்டுகளை
மழையாய்ப்
பொழிந்த யுத்த விமானங்களைக்
கண்டு நாம்
அஞ்சி ஓடினோம்.
இன்றோ
நம் நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு
இப்படி எம்மை மனித வடிவில்
விஷப்பாம்பாய்த்
துரத்துகிறதே.

சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை

## என்ன விலை

எரிபொருளே நீ என்ன விலை
நாளுக்குநாள் அகோரமாய்
உச்சம் தொடுகிறாய்
வீதி எங்கும் நீள் வரிசை
நீண்டுதான் செல்கிறது முடிவு இன்றி
ஏன் இந்த நிலை எமக்கு இன்று
வாழ்வின் எல்லை புரியாமல்
ஓடி ஓடி நாள் தோறும் களைத்து
முடிவு இன்றி தொடரும் அவலம்.

கும்பவாழியான்
உடுப்பிட்டி

## காத்திடுவாய்

புனிதமான ஒலிம்பிக் தீபத்துடன்
லங்கா நிரப்பு நிலையத்தில் நின்ற
வீரனே தீபங் கொண்டு
எரிபொருள் வாங்க வந்த
அப்பாபிதனை ஏன் துரத்துகிறாய்
கொல்லாதே கொல்லாதே
கொடுமைதனைச் செய்யாதே
இறைவனே எங்களைக் காத்திடுவாய்

பிரசன்னா நிஷா
தெல்லிப்பழை

## இல்லை

"இல்லை" எனும் அட்டை
எங்கும் தொங்கும் எரி
பொருள் நிலையமெலாம்
நயவஞ்சகராய் நாளும்
பின் கதவால் நிறையும்
கொள்கலன்கள் ஏழை
வெயிலில் வீழ்ந்து மடிய
வடிகாலமைத்து மாயமாய்
மறையும் எரிபொருளாம்

[illegible]

## மௌனத்தின் தேடல்- 563



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## எரிபொருள் பஞ்சம் ஏன்?

பதுக்கல் இல்லாது
ஒழிந்திடனும்
பங்கீட்டு வழிமுறை
வளர்ச்சியுறனும்
பொதுநலம் பேணிடும்
உணர்வுடனாய்
சிறப்புடன் நன்றே
செயற்பட்டால்
இலங்கையில் எரிபொருள்
தட்டுப்பாடுமோ
இல்லாது நீங்கியே
பயன் பெறலாமே.

தங்கத்தமிழன்
காரைநகர்

## மீட்பரென வந்தவரோ...

எரிபொருள் விலை மேலும் எகிறியது
எதிர்கால மீட்பரென வந்தவரோ
நரிக்குணமும் நயவஞ்சகமும்
நாதியற்ற கள்வருக்கு காவல்
புரியவந்த வஞ்சகரே மண்மீட்பு
போரை திரைமறைவில் மூழ்கடிக்க
திரி வைத்த சூத்திரதாரி எரி
பொருளாதருவார் ஏமாற்றும் போ்
வழியில் இவர்க்கீடு வேறுளரோ...

பவானிசன் நல்லூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நிகழ்ச்சியின் புரட்சி

# கடல் புறா

என்ற மஞ்சளழகியின் கண்கள் கனவுலகில் சஞ்சரிக்கத் தொடங்கின. அந்த நாட்டிய முறையைப் பற்றியும், பாரதம், சொர்ண பூமி இவற்றின் கலாசாரத்தைப் பற்றியும் பேசப் பேச அவள் முகத்தில் உணர்ச்சிகள் பலவாக விரிந்தன. கை கால்கள் கூட உணர்ச்சியால் மெல்ல மெல்ல அசைந்தன. அந்த அசைவைத் தொடர்ந்து சரேலென ஆசனத்திலிருந்து எழுந்த அவள், மஞ்சத்தின் கைப்பிடியில் ஒரு கையை வைத்துக்கொண்டு இடை துவளச் சிறிது நேரம் நின்றாள்.

அவள் நின்ற நிலை மனத்தை அப்படியே பறித்து விடும்படியாயிருந்ததை இளையபல்லவன் கவனித்தான். இடைதுவள, ஒரு கரம் நீண்டு மஞ்சத்தின் பிடியில் மலர் விரல்கள் அமர, இன்னொரு கை இடையில் பொருந்த, கால்கள் சற்றே ஒருபுறம் வளைய, பக்கவாட்டில் தலை சாய்த்து அவள் நின்ற கோலமே முதல்தரமான நாட்டியக் கோலமாக அமைந்திருந்ததைக் கவனித்த இளைய பல்லவன், என்ன நேரிடுவதாயிருந்தாலும் அன்றைய நடனத்தைப் பார்த்து விடுவதென உறுதி பூண்டான். அவன் உறுதியை மேலும் வலுப்படுத்தவும், உணர்ச்சிகளை அலைகழிக்கவும் அவள் மேலும் விவரித்தாள்.

"இளைய பல்லவரே! உங்கள் நாட்டு பரதத்தை நான் பார்த்திருக்கிறேன். மிகச் சிறந்த நாட்டிய முறை ஆனால் அதிலிருந்து முளைத்த அதனால் செழிப்புற்ற வாஜாங்குக்கு இணையான நாட்டியம் உலகில் எங்குமே கிடையாது.

இன்றிரவு நான் ஆடும்போது பாருங்கள், உலகமே ஆடும்: அங்கு வரும் கள்வர்கள் ஆடுவார்கள்: வீரர்கள் ஆடுவார்கள்: பெண்கள் ஆடுவார்கள்: இன்னிசை எழுந்து கலக்கும்: அந்தத் தாண்டவத்தில் உள்ளங்கள் புரண்டெழும்: உணர்ச்சிகள் அலை பெருகும்: வந்து பாருங்கள்... வந்து பாருங்கள்..."

மஞ்சளழகி மெய்மறந்து ஆவேசத்துடன் பேசினாள். அந்த ஆவேசத்தில், அவள் நின்ற நடனத் திருக்கோல அழகில், இளையபல்லவன் வசப்பட்டு நின்றான். அந்த இருவருமே அந்தச் சமயத்தில் சுயநிலை இழந்து நின்றார்கள். அத்தனையிலும் சுயநிலை இழக்காத ஒரு குரல் இன்பத்தின் இடையே பாய்ந்து துன்ப அஸ்திரமெனக் குறுக்கே புகுந்தது.

இன்பம் மட்டுமல்ல அந்த நடனத்தில்" என்ற உக்கிரமான சொற்கள் அக்ஷயமுனைக் கோட்டைத் தலைவன் வாயிலிருந்து புறப்பட்டு அவர்கள் உண்ண அலைகளை உடைக்கவே, மஞ்சளழகியும் இளைய பல்லவனும் ஏக காலத்தில் தலைவனை நோக்கித் திரும்பினார்கள். முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டாத அக்ஷய முனைத் தலைவன் இகழ்ச்சி தொனித்த குரலில் சொன்னான் இளையபல்லவனை நோக்கி, "இரவு நிகழ்ச்சியின் இன்பக் கிளையைப் புரிந்து கொண்டு விட்டீர்கள்," என்று.

"அப்படியானால் அதற்கு..." என்று துவங்கிய இளைய பல்லவனை இடைமறித்த அக்ஷயமுனைக் கோட்டைத் தலைவன் "ஆம் துன்பக் கிளையும் ஒன்று உண்டு நீங்களே சொன்னீர்களல்லவா இன்பத்தில் துன்பம் என்று" எனக் கூறினான்.

"ஆம் சொன்னேன்," என்றான் இளையபல்லவன்.

"நீங்கள் சொன்னது உண்மை. ஆனால் துன்பத்தின் எல்லையைப் புரிந்து கொள்ளாமல் சொன்னீர்கள்" என்றான் அக்ஷயமுனைக் கோட்டைத் தலைவனான பலவர்மன்.

"புரிந்து கொள்கிறேன், சொல்லுங்கள்."

"இப்பொழுது நீங்கள் மயக்கத்தின் பிடியிலிருக்கிறீர்கள், இரவு நிகழ்ச்சிக்கு வந்தால் மரணத்தின் பிடியிலிருப்பீர்கள்" என்று உணர்ச்சி ஏதுமற்ற வறண்ட குரலில் மரண ஓலை வாசிப்பவன்போல் பதில் கூறினான் பலவர்மன்.

இளையபல்லவன் மஞ்சளகியின் முகத்தைத் திரும்பி நோக்கினான். அப்பொழுது அதில் நாட்டியக் கனவில்லை. இன்பத்தின் நினைப்பில்லை. அச்சத்தின் சொரூபமாயிருந்தது அவள் வதனம். "சற்று நிலை தடுமாறி விட்டேன் தந்தையே" என்று அவள் தந்தையைப் பார்த்து மன்னிப்பும் கேட்டுக் கொண்டாள்.

"அது பெண்ணாகிய உனக்குச் சகஜந்தான்" என்று அலட்சியமாகப் பதில் சொல்லிவிட்டு மஞ்சளழகியைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் இளையபல்லவன் முகத்தில் மட்டும் தனது கண்களை நாட்டிக் கொண்டு சொன்னான் பலவர்மன். "இளையபல்லவரே! உங்கள் நாட்டுச் சாத்திரப்படி இன்று சித்தரா பௌர்ணமி. இன்றைய இரவு நாட்டியத்தை நாங்கள் என்றும் கைவிட்டதில்லை. இதைப் பெருவிழாவாகக் கொண்டாடுகிறோம். இது உண்மையில் சித்திரா பௌர்ணமி விழாவல்ல, ஒரு வகை அரசியல் விழா, இந்த விழாவின் முழு மர்மத்தை நீங்கள் அறிந்து கொள்ளச் சில வருடங்கள் பிடிக்கும். இந்த விழா இன்பமாகத்தான் ஒவ்வோர் ஆண்டும் துவங்குகிறது. இறுதியில் பத்துப் பதினைந்து கொலைகளாவது விழாமல் இதுவரை இந்த விழா முடிந்ததில்லை.

வாஜாங் மிக இன்பமான நாட்டியம். ஆனால் அதைப் பார்க்க மட்டும் வருவதில்லை கொள்ளைத் தலைவரும், மற்றக் காட்டு மிராண்டிகளும், தங்கள் பழைய விரோதங்களைத் தீர்த்துக் கொள்ளும் ஸ்தலமாகவும் விழா அரங்கத்தைப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். இந்தக் கொலைகளில் அரசாங்கத்துக்கும் பங்கு உண்டு. வேண்டாதவர்களை ஒழித்துக் கட்டுவதற்கும் இந்த விழா பயன்படுகிறது.

வாஜாங்கின் பின்னிசையைப் பற்றிச் சொன்னாள் என் மகள். பிறகு கலவரம் ஏற்படும்போது விளைவும் விபரீத ஒலிகளைப்பற்றி மட்டும் குறிப்பிடவில்லை அவள். அந்த ஒலிகள் அகூதாவின் உபதலைவரான உமது உணர்ச்சிகளைக்கூட உலுக்க வல்லவை."

பலவர்மனின் சொற்களை மிக அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த இளைபல்லவன் இறுதியாக வினவினான்! "இத்தகைய விழாவை நீங்கள் ஏன் நிறுத்தக் கூடாது?"

"நிறுத்த எனக்குச் சக்தியில்லை!" அக்ஷயமுனைக் கோட்டைத் தலைவன் திட்டமாகச் சொன்னான்.

"கலவரத்தை அடக்குவதும் அமைதியை நிலை நாட்டுவதும் உமது கடமையல்லவா?"

"ஆம்"

"பின் ஏன் ஒழுங்கைக் குலைக்கும் மரணத்தை விளைவிக்கும் இந்த விழாவை நடத்துகிறீர்கள்?"

"தலைமுறை தலைமுறையாக இது நடந்து வருகிறது."

"பழைய பழக்கத்தை மாற்றினால்?"

"இந்தக் கோட்டை தவிடுபொடியாகிவிடும். இந்த விழா இந்த நகரத் தேவதைக்காக ஆடப்படுகிறது. அந்தத் தேவதையால் தங்களுக்குப் பெரும் லாபமும் சுபிட்சமும் கிடைப்பதாக இந்த நாட்டுப் பூர்வகுடிகள் நினைக்கிறார்கள். ஆகையால் இதை நிறுத்த முடியாது.

நிறுத்தினால் பகத் சாதியார் இந்த நகரத்தில் புகுந்து இதை அழிப்பார்கள். சூலுக்கள் அரசாங்கத்துக்கு உதவ மாட்டார்கள். பிறகு கடலில் மற்றவர்கள் வைத்தது சட்டம்."

நிலைமையை நன்றாகப் புரிந்து கொண்டான் இளையபல்லவன். விழாவின் விளைவும் தெள்ளெனப் புரிந்தது அவனுக்கு அதைத் திட்டமாக விளக்க, "அதுமட்டுமல்ல இளையபல்லவரே! புதிதாக இந்தத் துறைமுகத்துக்குள் காலடி எடுத்து வைக்கும் யாரையும் இங்குள்ளவர்கள் விரும்புவதில்லை." என்றும் சுட்டிக் காட்டினான் கோட்டைத் தலைவன்.

தனக்கு ஏற்படக்கூடிய ஆபத்தை அவன் சுட்டிக் காட்டுகிறானென்பதை உணர்ந்துகொண்ட இளைய பல்லவன் சில விநாடிகள் சிந்தனையில் இறங்கினான். பிறகு ஒரு முடிவுக்கு வந்து "தலைவரே! நிலைமை விளங்கி விட்டது எனக்கு. மரணத்தின் வாயில் எனக்குப் புதிதல்ல.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம் : 7 ஜி ரெயின்போ காலனி
இயற்றியவர் : நா.முத்துகுமார்
இசை : யுவன் சங்கர் ராஜா
பாடியவர் : கிருஷ்ணகுமார் குன்னத்



மறைந்த கே.கேவின் நினைவாக

நினைத்து நினைத்து பார்த்தேன்
நெருங்கி விலகி நடந்தேன்
உன்னால் தானே நானே
வாழ்கிறேன் ஓஹோ
உன்னில் இன்று என்னை பார்க்கிறேன்

எடுத்து படித்து முடிக்கும் முன்னே
எரியும் கடிதம் எதற்கு பெண்ணே

உன்னால் தானே
நானே வாழ்கிறேன் ஓஹோ
உன்னில் இன்று என்னை பார்க்கிறேன்

ம்ம்ம் ம்ம்ம் ம்ம்ம்
ம்ம்ம் ம்ம்ம் ம்ம்ம் ம்ம்ம்

அமர்ந்து பேசும் மரங்களின் நிழலும்
உன்னை கேட்கும் எப்படி
சொல்வேன் உதிர்ந்து
போன மலரின் மௌனமா ஆ

தூது பேசும் கொலுசின் ஒலியை
அறைகள் கேட்கும்
எப்படி சொல்வேன்
உடைந்து போன
வளையல் பேசுமா ஆ

உள்ளங்கையில்
வெப்பம் சேர்க்கும் விரல்கள்
இன்று எங்கே தோளில்
சாய்ந்து கதைகள் பேச
முகமும் இல்லை இங்கே

முதல் கனவு முடிந்திடும் முன்னமே
தூக்கம் கலைந்ததே

நினைத்து நினைத்து பார்த்தேன்
நெருங்கி விலகி நடந்தேன்
உன்னால் தானே நானே
வாழ்கிறேன் ஓஹோ
உன்னில் இன்று என்னை பார்க்கிறேன்

பேசி போன
வார்த்தைகள் எல்லாம்
காலம் தோறும் காதினில்
கேட்கும் சாம்பல் கரையும்
வார்த்தை கரையுமா

பார்த்து போன
பார்வைகள் எல்லாம்
பகலும் இரவும் கேள்விகள்
கேட்கும் உயிரும் போகும்
உருவம் போகுமா

தொடர்ந்து வந்த
நிழலும் இங்கே தீயில்
சேர்ந்து போகும் திருட்டு
போன தடயம் பார்த்தும்
நம்பவில்லை நானும் ஒரு
தருணம் எதிரினில்
தோன்றுவாய் என்றே வாழ்கிறேன்

# நாடா இல்லை சடலங்கள் நிறைந்த சுடுகாடா?

இலங்கையின் விலைவாசியானது இன்று விண்ணை முட்டும் அளவுக்குச் சென்றுவிட்டது. அதிலிருந்து மக்கள் தப்பிப் பிழைப்பது என்பது ஒருபோதும் முடியாத காரியமாகவே இனிவரும் காலங்களில் இருக்கப் போகின்றது என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

தென்னாசியாவின் அதிசயமாய் எதிர்காலத்தில் இலங்கையை மாற்றுவோம் என ஆர்ப்பரித்த ஆட்சியாளர்கள் இன்று இலங்கையை தென்னாசியாவின் மக்களுடைய வரிசை யுகமாய் மாற்றியிருக்கின்றார்கள். அதில் அவர்களை அறியாமலேயே வெற்றியும் பெற்றிருக்கின்றார்கள். இதுவே அவர்கள் ஆட்சியில் நிகழ்த்திய மாபெரும் சரித்திரச் சாதனையாகும்.

எரிபொருள், எரிவாயு, பால்மா என இந்த வரிசை நீண்டு செல்கின்றது. அது மட்டுமல்லாமல் அதன் விலையும் விஸ்வரூபமாய் உயர்கின்றது. இது வடக்கு - தெற்கு என்று எந்தவித பேதமும் இல்லாமல் இலங்கையின் பொருளாதாரச் சரிவு என்ற ஒரு புள்ளியில் மூவின மக்களையும் வரிசையாய் இணைத்திருக்கின்றது.

இலங்கையின் தற்போதைய இந்த மோசமான நிலைமையானது மூவின மக்களிடமும் பெரும்பாலும் ஒன்றை மட்டும் உணர்த்தி நிற்கின்றது. வெள்ளைக்காரரிடம் இருந்து சுதந்திரம் பெற்ற இலங்கை தேசம் [illegible] அரசியல்வாதிகளின் ஆதிக்கத்திலிருந்து பூரணமாக சுதந்திரம் பெறவில்லை என்பதே அது.

இலங்கையின் பெரும்பாலான நிதி வளங்கள் பாராளுமன்றத்தை கூட்டிப் பெருக்குவதிலும், அரசியல் வாதிகளை சலுகைகளின் ஊடாக முழுமையாக திருப்திப்படுத்துவதிலுமே விரயமாகிக் கொண்டிருக்கின்றது. அதைவிட அரச திணைக்களங்களில் அரச சேவையில் ஈடுபடும் உயர் மட்ட அதிகாரிகளுக்கு அரச சலுகை என்ற பெயரிலும் பெரும்பாலான அரச நிதிகள் வாரி இறைக்கப்படுவதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியிருக்கின்றது. இலங்கையில் விவசாயம் அடியோடு செத்துவிட்டது என எதிர்க் கட்சிகளும் அதனுடன் சேர்ந்து ஆளுங்கட்சி அமைச்சர்களும் ஒப்பாரி வைக்கத் தொடங்கியுள்ளனர். ஒரு விவசாயிக்கு விதைப்பதற்கு உரமும் இல்லை. இறைப்பதற்கு எரிபொருளும் இல்லையென்றால், எதை வைத்து விதைப்பது. எதை வைத்து அறுவடை செய்வது. எதை அவித்து சாப்பிடுவது என்ற நிலையே தற்பொழுது நிலவுகிறது.

படு வேகமாக இலங்கையின் பொருளாதாரம் இந்தளவுக்கு வீழ்ச்சியடைந்ததற்கு முக்கிய வகிபாகம் வகிப்பது காலம் காலமாக இனங்களுக்கு இடையிலான, மதங்களுக்கு இடையிலான, பொருளாதார ரீதியிலான ஏற்றத் தாழ்வுகளும் துவேச சிந்தனைகளும் பிரிவினைகளுமே எனலாம். இவையே இலங்கையின் பொருளாதாரத்தின் வீழ்ச்சியை தீர்மானிக்கும் மாபெரும் சக்தியாக இன்றுவரை விளங்குகிறது.

ஒரு புதிய தலைமுறையின் ஊடாகவே இலங்கையில் அரசியல்வாதிகளை அடியோடு புறக்கணித்துவிட்டு இனங்களுக்கு இடையிலான, மதங்களுக்கு இடையிலான அகங்காரங்களை முற்று முழுதாக களைந்து நாம் இலங்கையர் என்ற உணர்வோடு பொருளாதாரத்தை நோக்கி போராடுவோமானால், இலங்கையின் பொருளாதாரத்தை மீட்ட மீட்பர்களாய் எதிர்காலத்தில் பரிணமிக்க முடியும்.

எது எம்மிடம் இருக்கிறதோ அதுதான் தற்சார்பு. அந்த தற்சார்பு பொருளாதாரக் கட்டமைப்பை மக்களாகிய நாம் எதிர்காலத்தில் வடிவமைத்துக் கொள்ள வேண்டும். மக்களால் மக்களுக்கு என்ற அடிப்படைக் கொள்கையே ஒரு நாட்டின் ஜனநாயகத்திலும் சரி பொருளாதாரத்திலும் சரி ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தி விடும். இதை நாம் ஆழ்ந்த சிந்தனைகளின் அடிப்படையில் செயற்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஒரு நாட்டினுடைய மனித ஆற்றல், மனித உழைப்பு, அந்த நாட்டினுடைய வளங்கள் இவையனைத்தையும் ஒன்று திரட்டி ஒரு பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்க முடிந்தால், அந்த நாட்டில் பஞ்சம், பட்டினி என்ற பேச்சுக்கே இடமில்லை. இதை நேர்த்தியாகச் செய்யக் கூடிய ஒரு தலைவன் உள்ள நாடே நாடாகக் கணிக்கப்படும். இல்லையேல் அது சடலங்கள் நிறைந்த சுடுகாடகவே சர்வதேச சமூகத்தால் பார்க்கப்படும்.




**எது எம்மிடம் இருக்கிறதோ அதுதான் தற்சார்பு. அந்த தற்சார்பு பொருளாதாரக் கட்டமைப்பை மக்களாகிய நாம் எதிர் காலத்தில் வடிவமைத்துக் கொள்ள வேண்டும். மக்களால் மக்களுக்கு என்ற அடிப்படைக் கொள்கையே ஒரு நாட்டின் ஜனநாயகத்திலும் சரி பொருளாதாரத்திலும் சரி ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தி விடும்.**

**சாம்.ரமேஸ்குமார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரலாகும் அட்லீ – ஷாருக்கான் படத்தின் டைட்டில் டீசர்

தமிழில் ராஜா ராணி, மெர்சல், தெறி, பிகில் படங்களை இயக்கிய அட்லீ, இயக்கி வரும் ஹாலிவுட் படத்தின் தலைப்பு மற்றும் அதன் ரீசர் வெளியாகி வைரலாகி வருகிறது.



2013 ஆம் ஆண்டு வெளியான 'ராஜா ராணி' படம் மூலம் இயக்குனராக அறிமுகமான அட்லீ, தனது முதல் படத்திலேயே முத்திரை பதித்து அனைவரது கவனத்தையும் ஈர்த்தார். அதனைத் தொடர்ந்து விஜய் நடிப்பில் 'தெறி', 'மெர்சல்', 'பிகில்' என ஹாட்ரிக் வெற்றிப் படங்களை கொடுத்து, தமிழ் சினிமாவில் முன்னண்ணி இயக்குனரானார். தற்போது அட்லீ பாலிவுட் படம் ஒன்றை இயக்கி வருகிறார். இதன் மூலம் பாலிவுட் திரையுலகில் அட்லீ அறிமுகமாகிறார். இதில் ஷாருக்கான் கதாநாயகனாக நடிக்க, அவருக்கு ஜோடியாக நயன்தாரா நடிக்கிறார். "ரெட் சில்லிஸ் என்டர்டெயின்மென்ட்" சார்பாக கௌரிகான் தயாரிக்கும் இப்படம் இந்தி, தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னடம் போன்ற மொழிகளில் வெளியாக உள்ளது. இதன் படப்பிடிப்பு முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் இப்படத்தின் டைட்டில் ரீசரை படக்குழு அதிகாரபூர்வமாக வெளியிட்டுள்ளது. "ஜவான்" என்று தலைப்பு வைக்கப்பட்டிருக்கும் இப்படம் 2023 ஆம் ஆண்டு ஜீன் 2 ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. அனிருத் இசையமைத்திருக்கும் இப்படத்தின் டைட்டில்ரீசர் தற்போது சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

# திரைவிமர்சனம் விக்ரம்

காவல் துறையில் இருப்பவர்களை மாஸ்க் அணிந்த மர்ம கும்பல் கொலை செய்கிறது. இதில் காளிதாஸ் ஜெயராமும் கொல்லப்படுகிறார். அது போல் காவல் துறையில் சம்பந்தம் இல்லாமல் இருக்கும், காளிதாசனின் வளர்ப்பு அப்பா கமலும் கொல்லப்படுகிறார். மாஸ்க் மனிதர்களை கண்டுபிடிக்க, சீக்ரெட் ஏஜென்சிஸ் ஆக இருக்கும் பகத் பாசிலிடம் ஒப்படைக்கப்படுகிறது.

மாஸ்க் மனிதர்கள் பற்றிய விபரங்களை சேகரிக்கும் பகத் பாசிலுக்கு பல திடுக்கிடும் தகவல்கள் கிடைக்கிறது. இறுதியில் பகத் பாசில், மாஸ்க் மனிதர்களை கண்டு பிடித்தாரா? கமலை மாஸ்க் மனிதர்கள் கொலை செய்ய காரணம என்ன? மாஸ்க் மனிதர்கள் காவல் துறையினரைகொல்ல காரணம்என்ன? என்பதே படத்தின் மீதிக் கதை.




படத்தில் நாயகனாக நடித்திருக்கும் கமல், முதல் பாதியில் கர்ணனாகவும், இரண்டாம் பாதியில் விக்ரமாகவும் நடித்திருக்கிறார். குடிகாரன், மகனை நினைத்து கவலைப்படும் பாசமான தந்தை. பேரனை நினைத்து ஏங்கும் தாத்தா என நடிப்பில் பளிச்சிடுகிறார். அது போல், நடனம், ஆக்ஷன், என ரசிகர்களை கவர்ந்து இருக்கிறார்.

கமலுக்கு அடுத்தபடியாக பலருடைய கவனத்தை ஈர்த்து இருக்கிறார் பகத் பாசில். முதல் பாதி முழுவதும் திரைக்கதையை தன் வசப்படுத்தி இருக்கிறார். சின்ன சின்ன அசைவுகளில் கூட ரசிக்க வைத்திருக்கிறார் விஜய் சேதுபதி. அலட்டல் இல்லாத இவரது நடிப்பு படத்திற்கு பெரிய பலம். காயத்ரி, மைனா, சிவானி, மகேஷ்வரி ஆகியோர் கொடுத்த வேலையை செய்திருக்கிறார்கள். தனக்கே உரிய பாணியில் நடித்து ரசிகர்களை கவர்ந்து இருக்கிறார் நரேன். சூர்யாவின் மாஸ் சீன் தியேட்டரில் விசில் பறக்கிறது.

போதை பொருளை மையமாக வைத்து ஆக்ஷன், சென்டிமென்ட், பழிக்கு பழி என திரைக்கதை அமைத்து படத்தை இயக்கி இருக்கிறார் இயக்குனர் லோகேஷ் கனகராஜ். கதாபாத்திரங்களி டையே திறமையாக வேலை வாங்கி இருக்கிறார் இயக்குனர். அனிருத் இசையில் பாடல்கள் அனைத்தும் சூப்பர் ஹிட். பின்னணி இசையில் அதிக ஸ்கோர் செய்திருக்கிறார். கிரீஸ் கங்காதரனின் ஒளிப்பதிவு சிறப்பு. மொத்தத்தில் "விக்ரம்" வின்னர்.

# கமல்ஹாசனை தொடர்ந்து பிரபல நடிகருக்கு வில்லனாகும் விஜய் சேதுபதி

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகராக வலம் வரும் விஜய் சேதுபதி, விக்ரம் படத்தைத் தொடர்ந்து பிரபல நடிக்ருக்கு வில்லனாக நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

விக்னேஷ் சிவன் இயக்கத்தில் வெளியான "காத்துவாக்குல இரண்டு காதல்" படத்தின் வெற்றியைத் தொடர்ந்து விஜய் சேதுபதி, கமல் நடிப்பில் வெளியாகி இருக்கும் "விக்ரம்" படத்திலும், சீனுராமசாமி இயக்கத்தில் "மாமனிதன்" படத்திலும் நடித்துள்ளார். "மாமனிதன்" திரைப்படம் வருகிற ஜீன் 23 ஆம் திகதி திரையரங்கில் வெளியாகவுள்ளது. விஜய் சேதுபதி தற்போது தமிழ், இந்தி மற்றும் மலையாளம் ஆகிய மொழி படங்களில் நடித்து வருகிறார். இவர் கைவசம் "விடுதலை", "மெர்ரி கிறிஸ்துமஸ்", "காந்தி டாக்ஸ்", 'மும்பைக்கர்' உள்ளிட்ட படங்கள் உள்ளன.

இந்நிலையில் தெலுங்கு திரையுலகின் முன்னணி நடிகர் மகேஷ் பாபு அடுத்து திரிவிக்ரம் ஸ்ரீனிவாஸ் இயக்கத்தில் நடிக்கவிருக்கும் படத்தில் விஜய் சேதுபதி வில்லனாக நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இப்படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்கவுள்ளதாகவும், இதில் விஜய் சேதுபதி நடிப்பது குறித்த பேச்சு வார்த்தை நடைப்பெற்று வருவதாகவும் கூறப்படுகிறது. கமல் நடிப்பில் வெளியாகியுள்ள விக்ரம் படத்தில் வில்லனாக விஜய் சேதுபதி நடித்திருந்ததைத் தொடர்ந்து மகேஷ் பாபு படத்தில் நடிக்க இருப்பதை ரசிகர்கள் பெரிதும் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

இதற்குமுன் 2020-ஆம் ஆண்டு தெலுங்கில் வெளியான "உப்பெனா" படத்தில் விஜய் சேதுபதி வில்லனாக நடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# தளபதி 66 படத்தில் மீண்டும் 'கில்லி' கூட்டணி

இயக்குநர் வம்சி இயக்கத்தில் தளபதி 66 திரைப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்தப் படத்தில் ராஷ்மிகா மந்தனா, ஷாம், சரத்குமார், யோகி பாபு, சம்யுக்தா, நடிகை சங்கீதா, தெலுங்கு நடிகர் ஸ்ரீகாந்த் என பெரும் நடிகர் பட்டாளமே நடித்து வருகிறது.

இதனிடையே இந்தப் படத்தில் விஜயுடன் நடிகர் பிரகாஷ் ராஜ் இணையவுள்ளதாக தகவல்கள் பரவின. இந்நிலையில், நடிகர் பிரகாஷ் ராஜ் விஜயுடன் இருக்கும் படத்தைப் பகிர்ந்து தளபதி 66 படத்தில் நடிப்பதை உறுதி செய்துள்ளார். "ஹாய் செல்லம்ஸ்- தளபதி 66 படத்தில் மீண்டும் நாங்கள் கூட்டணி வைக்கிறோம்" என்று பதிவிட்டுள்ளார்.

கில்லி பாணியில் ஹாய் செல்லம்ஸ் எனக் குறிப்பிட்டு தளபதி 66 படத்தில் நடிக்கும் தகவலை உறுதிப்படுத்தியுள்ளதால் ரசிகர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஸ்ரீ வெங்கடேஸ்வரா கிரியேஷன்ஸ் சார்பில் தயாரிப்பாளர் தில் ராஜு தயாரிக்கிறார்.

படத்திற்கு இசையமைப்பாளர் தமன் இசையமைத்து வருகிறார். ஏற்கனவே படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு நிறைவடைந்த நிலையில் தற்போது இரண்டாம் கட்டப் படப்பிடிப்பு விறு விறுப்பாக நடந்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் சில அதிசயங்கள்...

கோனார்க் என்பதற்கு சமஸ்கிருத மொழியில் சூரியனின் கோணம் என்று பொருள் ஐரோப்பியப் பயணிகள் இவ்வாலயத்தை கருநிறக் கோவில் என்றும் பூரி ஜகன்னாதர் ஆலயத்தை வெண்ணிறக் கோவில் என்றும் அழைக்கிறார்கள். சந்திர பாக ஆற்றில் வாயிலில் அமைக்கப்பட்டிருக்கும் இந்தத் தேர் வடிவ ஆலயத்தின் கற்சக்கரங்கள் மொத்தம் 12. ஒவ்வொரு சக்கரமும் சுமார் 3 மீற்றர் உயரம் உடையவை. கலிங்க சிற்ப பாணியில் உருவாக்கப்பட்ட சிலைகள் நிறைந்த நுழைவுவாயில் சூரியனின் முதல் கதிர்கள் உள்ளே வரும் படி அமைக்கப்பட்டுள்ளது.


இந்த ஆலயத்தின் அருகே பழமை வாய்ந்த இரண்டு ஆலயங்கள் சிதைந்த நிலையில் இருந்ததை சமீபத்தில் கண்டறிந்துள்ளார்கள். ஒன்று மாயாதேவி ஆலயம் மற்றொன்று வைணவர்கள் வணங்கக்கூடிய பலராமன், வராஹா, திரிவிக்கிரம சிலைகள் அடங்கிய கோவில். யுனெஸ்கோ நிறுவனம் இந்த ஆலயத்தை உலக பாரம்பரியச் சின்னமாக அறிவித்துள்ளது.

## கஜுரோஹா சிற்பங்கள்

மத்தியப் பிரதேசத்தில் சத்தர்பூர் மாவட்டத்தில் கஜுரோஹா என்னும் இடத்தில் உள்ள கஜுரோஹா சிற்பங்கள் வழமையான முறைகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டவை. கி.பி 950 க்கும் 1150 க்கும் இடைப்பட்ட காலத்தில் சந்தேலா வம்சத்து அரசன் மஹாராஜா ராவ் விக்கிரமபுரா ஆட்சியில் உருவாக்கப்பட்டவை.

கஜுரோஹா என்பதற்கு பேரிச்சை மரங்கள் என்று பொருள். அதற்கேற்றார் போல் இந்தச் சிற்பங்களைச்சுற்றி உள்ள சுற்றுச் சுவர்களில் பேரிச்சை மரச் சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. சந்தேலா ஆட்சிக்காலத்தில் பிரம்மசரியத்தைக் கடைப்பிடிக்கும் இளைஞர்களுக்கான மடங்கள் ஊருக்கு வெளியே எவர் தொடர்பும் இன்றி வாழும் வகையில் இருந்திருக்கின்றன. அவர்கள் உலக வாழ்வியல் கூறுகளைப்பற்றி அறிய வேண்டும் என்பதற்காக இந்த ஆலயத்தில் சமகால மனிதர் களின் அன்றாட பணிகள் அவர்களது உணர்வுகள் ஆகிய வற்றை பிரதிபலிக்கும் சிற்பங் களை வடித்துள்ளதாக சில குறிப்புக் கள் தெரிவிக்கின்றன.

உண்மையில் சிற்றின்ப உறவு நிலையை வெளிப்படுத்தும் சிற்பங்கள் பத்து சதவிகித அளவே இருக்கின்றன. எஞ்சிய சிற்பங்கள் மனிதர்களின் ஏனைய வாழ்வியல் சூழல்களையே பிரதிபலிக்கின்றன.




## ஜெய்சல்மார் கோட்டை

ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ஜெய்சல்மார் கோட்டை உலகின் வனப்புமிக்க விசாலமான கோட்டைகளில் ஒன்று. கி.பி. 1156இல் ரஜபுத்திர மன்னன் ராவ் ஜெய்சால் ஆட்சி காலத்தில் இந்த கோட்டை கட்டப்பட்டது.

பெர்சிய அரேபிய கலை நுட்பமும் எகிப்து மற்றும் ஆபிரிக்க பாணி கலைத்திற னும் சேர்ந்து உருவாக்கப்பட் டது இந்த கோட்டை. இதன் பாதுகாப்புக்காக மூன்று அடுக்கு சுவர்கள் கட்டப்பட் டுள்ளன. ஒவ்வொரு சுற்றுச்சு வருக்கு அடுத்தும் கொதிக்கும் எண்ணெய் மற்றும் வெந்நீர் கொட்டப்பட்டு இருந்தனவாம்.

(தொடரும்...)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2549

**மயூரேசன்**

நியாயங்கள்
நம் பக்கம் இருந்தாலும்
புரிந்து கொள்ளாதவர்களோடு
வாதிட முடியாமல்
சில நேரங்களில்
அமைதியாகத்தான் நாம்
இருக்க வேண்டியுள்ளது.


**மாதங்கி**

ஒரு மனிதன் தனது
துயரத்தில் தான்
உண்மையான
மனிதர்களை
அறிகின்றான்....

**ஸெகதீஸ்**

உண்மையான உறவுகளுக்கு
விட்டுக்கொடுங்கள் ஏனெனில்
அது பாசம்!!!
உறவெனும் பெயரில் உங்களை
உபயோகப்படுத்திக் கொண்டே
இருப்பவர்களை விட்டு விடுங்கள்
ஏனெனில் அது வேசம்

**லாவண்யா**



வெற்றியடையச் சிறந்த வழி...
'மற்றவர்கள் பார்வையில்'
முட்டாளகத் தெரிய வேண்டும்,
ஆனால் உண்மையில்
புத்திசாலியாக இருக்கவேண்டும்.

**வித்தகன்**

உன் மனதில் உள்ள
வார்த்தைகளையும்
கோபத்தில் உள்ள
அன்பையும், யாரால் உணர
முடிகிறதோ!! அவர் தான்
உனக்காக படைக்கப்பட்ட
உயிரான ஒரு உறவு

**விதுஜா**

படுத்துக்கொண்டே டிவி பார்க்கும் போது
வாற தூக்கம்...



எழுந்து போய் டிவிய ஓப் பண்ணிட்டு
வந்தா கழுதை எங்க போகுது
என்று தெரியல

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

293

வலம்புரியின் மருத்துவச்சுபர்

# வண்டி அல்லது தொப்பையைக் குறைத்துக் கொள்ள...

எங்கள் எல்லோருக்கும் தொப்பையை அதாவது வண்டியை குறைத்துக் கொள்ள ஆசை. ஆனால் சில பிழையான தகவல்களாலும் சில விஞ்ஞானபூர்வமற்ற தகவல்களாலும் நாங்கள் பிழையாக வழிநடத்தப்பட்டு இந்த முயற்சியிலே தோற்றுப் போகின்றோம், ஏமாந்து போகின்றோம். எனவே இந்த தொப்பையைக் குறைப்பதற்கு அல்லது இல்லாமல் செய்வதற்கு 8 விடயங்கள் சம்பந்தமான ஒரு தெளிவு எமக்கு இருக்குமாக இருந்தால் நாம் இந்த முயற்சியிலேயே வெற்றி பெறுவது கடினமாக இருக்காது.

1. தொப்பைக்கான சில பிரத்தியேக பயிற்சிகளை செய்வது, தொப்பைக்கு பெல்ற் கட்டுவது, தொப்பையை அதிரச் செய்யும் சில உபகரணங்களைப் பாவிப்பது போன்றவற்றின் மூலம் தொப்பையை குறைத்துக் கொள்ள முடியாது. இவற்றின் மூலம் சிலசமயம் தற்காலிகமாக தொப்பை குறைவது போன்ற ஒரு தோற்றப்பாடு இருந்தாலும் இவை தொப்பையைக் குறைத்துக் கொள்வதற்கான ஒரு வழிமுறையாக இருக்காது. இந்த வழிமுறைகளின் மூலம் எமக்கு வயிற்றுக் குழியினுள் இருக்கும் கொழுப்பை அதாவது (Visceral fat) ஐ குறைக்கவும் முடியாது. தொப்பை வைப்பதால் ஏற்படும் ஆபத்தையும் குறைத்துக் கொள்ள முடியாது.

2. தொப்பையைக் குறைத்துக் கொள்வதற்காக சிலவற்றை உண்பது, குடிப்பது உதாரணமாக: Green Tea ஐ குடிப்பது, கொள்ளு சாப்பிடுவது, சில மா வகைகளை கரைத்துக் குடிப்பது போன்ற செயற்பாட்டின் மூலமும் எமது தொப்பையைக் குறைத்துக் கொள்ள முடியாது. தொப்பை ஏற்படுவதற்கான காரணம் நாம் சில பிழையான உணவு வகைகளை அதிகளவில் உண்பதாகும். இதன்மூலமே எமது வயிற்றுத் தோலின் அடியிலும், வயிற்றுக் குழியினுள்ளும் மேலதிகமான கொழுப்புப் படிந்து அதன் காரணமாக தொப்பை ஏற்படுகின்றது. இந்த படிந்திருக்கும் கொழுப்பை அதாவது வயிற்று சுவரினுள்ளும் வயிற்றுக்குழியினுள்ளும் இருக்கும் கொழுப்பை இன்னொரு வகையான உணவு உண்பதன் மூலம் கரைத்துக் கொள்ள முடியாது.

இந்தக் கொழுப்பு ஒரு கரையும் பொருளும் அல்ல. கரைந்த கொழுப்பை எதன் மூலம் வெளியேற்றுவது என்பதும் ஒரு கேள்வி. சில பிழையான தகவல்கள் மூலமும் பிழையான வழிநடத்தல்கள் மூலமும் நாம் அநாவசியமாக பெருந்தொகையான பணத்தையும் செலவிட்டு ஏமாந்து போகின்றோம். இது ஒரு மனவருத்தமான விடயம்.


3. பொதுவான ஒரு தப்பபிப்பிராயம் இருக்கிறது. கொழுப்பு உணவுகளை உண்பதன் மூலம் தான் எமக்கு தொப்பை ஏற்படுகிறது என்று. இது தவறானது. எமக்கு தொப்பை ஏற்படுவதற்கு பிரதான காரணமாக இருப்பது மேலதிகமாக மாப்பொருள் உண்பதே. மேலதிகமாக மாப்பொருள் உண்போமாக இருந்தால் அது கொழுப்பாக மாற்றப்பட்டு வயிற்றுக்குழியினுள்ளேயும், வயிற்றினுடைய உள்ளுறுப்புகள் (குடல் சூழ்ந்த பகுதி ஈரல், தசைகள் உள்ளே) என்பவற்றில் படிகிறது. இதுதான் தொப்பை வைப்பதற்கு பிரதான காரணமாக இருக்கிறது. இந்த Visceral fat ஆனது பல சுரப்புகளை சுரக்கின்றது. இந்த சுரப்புக்கள் எமக்கு பல தொற்றா நோய்களை ஏற்படுத்தி நிற்கின்றன. உயர் குருதி அமுக்கம், நீரிழிவு, கொலஸ்ரோல் போன்ற பல தொற்றா நோய்களை ஏற்படுத்துகின்றன. இதற்கு பிரதானமான காரணமாக அமைவது மாப்பொருளே கொழுப்பு அல்ல. இதற்கு ஒரு படி மேலாக சில நல்ல வகையான கொழுப்புகள் இந்தக் கொழுப்பை குறைத்து தொப்பை குறைவதற்கு காரணமாக அமைகின்றது என்று சில ஆராய்ச்சிகள் தெளிவுபடுத்தியிருக்கின்றன.

4. உணவிலே எமது உடல் இன்சுலினை அதிகப்படுத்துகின்ற உணவு வகைகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும். உடலிலே இன்சுலினின் அளவு அதிகமாக இருந்தால் அது குளுக்கோஸை வேகமாக கொழுப்பாக மாற்றுகின்றது. இதன்மூலம் வயிற்றுக்குழியினுள் படியும் கொழுப்பின் அளவு வேகமாக அதிகரிக்கின்றது. எனவே எந்த வகையான உணவுகள் எமது உடலில் உள்ள இன்சுலினின் அளவை அதிகப்படுத்துகின்றன என்று பார்ப்போமாக இருந்தால் விசேடமாக சீனி, சர்க்கரை போன்ற இனிப்பு வகைகள் எமது உடலினுடைய இன்சுலினின் அளவை வேகமாக அதிகரிக்கச் செய்கின்றது. இதனால் குளுக்கோஸ் வேகமாக கொழுப்பாக மாற்றப்பட்டு வயிற்றினுள் படிகின்றது. இது தொப்பை ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக அமைகின்றது.

எனவே தொப்பையை குறைக்க விரும்புவோர் சீனி, சக்கரை, சீனி சேர்த்த தேநீர், பான வகைகளை முற்றாக தவிர்த்துவிட வேண்டும். அத்துடன் சீனியிலே 50% குளுக்கோஸும் 50% பிறக்ரோஸ் என்று சொல்லப்படுகின்ற ஒரு வெல்லமும் இருக்கின்றன. இந்த பிறக்ரோஸ் உடலினுள் செல்லும் பொழுது அதனை எமது ஈரலினால் மட்டுமே கையாள முடியும். இந்த கூடுதலான பிறக்ரோஸ் ஈரலை அடையும் போது அதற்கு வேறு மார்க்கம் இல்லை. எனவே இந்த பிறக்ரோஸை கொழுப்பாக மாற்றுகின்றது. வயிற்றுக்குழியினுள் கொழுப்பாக மாறி தொப்பையை ஏற்படுத்தும் ஒரு பிரதான காரணமாக அமைகின்றது.

5. வேகமாக ஓடுதல், வேகமாக சைக்கிள் ஓடுதல் போன்ற சற்றுக் கடுமயான உடற்பயிற்சியை செய்வது வயிற்றுக் கொழுப்பை குறைப்பதற்கு பெரிதும் உதவியாக இருக்கிறது என்று ஆய்வுகள் தெளிவுபடுத்தி இருக்கின்றன. கடுமையாக உடற்பயிற்சி செய்யும் பொழுது நாம் களைப்படைந்து விட்டால் அந்த உடற்பயிற்சி வீதத்தை குறைத்து களைப்பு நீங்கிய பின் மீண்டும் கடுமையான உடற்பயிற்சியை செய்ய முடியும். உதாரணமாக நாம் வேகமாக ஓடும் போது களைப்படைந்து விட்டால் வேகத்தை குறைத்து நடந்து களைப்பாறி பின் திரும்ப வேகமாக ஓடி பிறகு களைப்படைந்த பின் வேகத்தை குறைத்து நடந்து திரும்ப வேகமாக ஓடல் இவ்வாறு மாறி மாறி செய்தல் வண்டி கொழுப்பை குறைப்பதற்கு பெரிதும் உதவும். நீந்துதல், வேகமாக சைக்கிள் ஓடுதல் என்பவற்றையும் கடுமையான உடற் பயிற்சி என்று கருத முடியும்.

6. மாப்பொருள் அதிகமாக சேர்த்துக் கொள்வதை த்விர்த்துக் கொள்ள வேண்டும். மாப்பொருள் உள்ள உணவு வகை எவை என்று பார்ப்போமாக இருந்தால் அவை இடியப்பம், பிட்டு, சோறு, பாண் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றை உணவிலே வெகுவாகக் குறைத்துக் கொள்வதன் மூலம் நாம் எமது தொப்பையை குறைத்துக் கொள்ளலாம். அண்மையிலே ஒரு ஆய்வு செய்தார்கள். சம அளவான கலோரிப் பெறுமானம் உள்ள மாப்பொருளையும் கொழுப்பையும் கொடுத்து எந்த வகையான உணவுக்கு தொப்பை அதிகமாக



ஏற்படுகின்றது என்று ஆராய்ந்தார்கள். அந்த ஆராய்ச்சியின் முடிவிலே மாப்பொருள் உண்பதால் தான் தொப்பை ஏற்படுகிறது என்பதை உறுதி செய்திருக்கிறார்கள். எனவே எமது உணவிலே இயன்றளவு மாப்பொருளை குறைத்து கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

7. எமது உணவிலே அதிகளவு புரதத்தை சேர்த்துக் கொள்வதன் மூலம் தொப்பையைக் குறைத்துக் கொள்ளலாம். இது பல காரணங்களினால் நடைபெறுகின்றன. புரத உணவை நாம் உண்போமாக இருந்தால் அது நல்ல முறையிலே எமது பசியைக் கட்டுப்படுத்துகின்றது. இதன்மூலம் நாம் உள்ளெடுக்கும் உணவை கட்டுப்படுத்தலாம்.

நாம் உண்ணும் புரதத்தை உடல் பயன்படுத்துவதற்கு எமது உடலில் உள்ள சக்தியின் ஒரு பகுதி எரிக்கப்படுகின்றது. இதுவும் எமது நிறை குறைப்புக்கு உதவியாக இருக்கும். நாம் மாப்பொருளோ, கொழுப்போ உட்கொள்ளும்போது அவற்றை உடல் பயன்படுத்தும் போது மேலதிகமாக எமது சக்தி எதுவும் எரிக்கப்படுவதில்லை. ஆனால் நாம் உண்ணும் புரதத்தை உடல் பயன்படுத்தும் போது எமது சக்தியில் ஒரு பகுதி மேலதிகமாக எரிக்கப்படுகிறது. இது மேலதிகமான ஒரு நன்மை. எனவே இதுவும் எமது நிறையைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு உறுதுணையாக இருக்கின்றது. இதற்கு மேலதிகமாக நாம் உண்ணும் புரதம் ஆனது visceral fat ஆக மாற்றமடையாது. எனவே நாம் எமது உணவில் 80-160g புரதத்தை தினமும் உட்கொள்ள முடியும்.

புரத உணவு எவை என்று பார்ப்போமானால் பால், தயிர், மோர், பருப்பு வகைகள், மீன், முட்டை, இறைச்சி, பயறு போன்றவற்றை குறிப்பிடலாம். இந்த புரத உணவு வகைகளுடன் நாம் நார்த்தன்மை உள்ள உணவு வகைகளையும் சேர்ப்போமாக இருந்தால் தொப்பை குறையும் வீதம் அதிகமாகும். நார்த்தன்மை உள்ள பொருள் எவை என்று பார்ப்போமாக இருந்தால் கீரை, மரக்கறி வகைகள், கரட், பழவகைகள், வாழைப்பொத்தி, முருங்கை இலை, அகத்தி இலை போன்றவற்றை குறிப்பிடலாம். எனவே எமது உணவிலே புரதத்தையும் நார்த்தன்மை உள்ள உணவுகளையும் அதிகம் எடுப்போமாக இருந்தால் அது எமது தொப்பையை குறைப்பதற்கு உதவியாக இருக்கும்.

8. நாம் வாரத்திலே 2 அல்லது 3 நாட்கள் விரதம் இருப்பது அதாவது 18 மணித்தியாலங்கள் உணவு உண்ணாமல் இருக்கும் வேளைகளிலே எமது வண்டிக் கொழுப்பு வேகமாக உடைக்கப்படுகின்றது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் நாம் விரதத்தை முடிக்கும் போது மாப்பொருள் உண்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

நீங்கள் விரதம் பிடிக்காமல் உடல் நிறையை குறைப்பதற்காக உண்ணாமல் இருப்பீகளாக இருந் தால் முட்டை, மீன் இறைச்சி வகைகளை உண்ண முடியும். ஆனால் இந்த விரதத்தினுடைய முடிவிலே சோறு, பருப்பு, குழம்பு போன்ற ஒரு பெரும் உணவை உண்போமாக இருந்தால் அது எமது உடலின் இன்சுலின் சுரப்பை அதிகரித்து இந்த வண்டிக் கொழுப்பு அதிகரிப்பதற்கு அது ஒரு காரணமாக அமைந்து விடுகிறது.

எனவே நாம் எமது தொப்பையைக் குறைப்பதற்கு விருப்பப்பட்டு, ஆர்வப்பட்டு அதற்கான முயற்சியை எடுப்போமாக இருந்தால் இந்த முயற்சி நிச்சயம் வெற்றி அளிக்கும்.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்றதிகார முறையை முற்றாக ஒழிக்க கூடாது

## ஹாபிஸ் நஷீர்



(கொழும்பு)

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிக்க எடுக்கப்படும் முயற்சிகள் ஆபத்தானது. இந்தப் பதவிக்கு வரும் ஆட்களைப் பொறுத்தே, இதன் ஆழ, அகலங்கள் அறியப்படுவதாக முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினருமான ஹாபிஸ் நஷீர் அஹமட் தெரிவித்தார்.

இது குறித்து ஊடகங்களுக்கு அவர் தெரிவித்ததாவது,

நிறைவேற்றதிகாரம் மக்களுக்கான உச்ச பாதுகாப்பளிக்கிறது. கடந்தகாலங்களில் அனுபவிக்க நேர்ந்தவைகள் சிலவற்றால், இப்பதவியை ஒழிக்க வேண்டுமென்ற கோஷங்கள் எழுந்துள்ளன.

ஆனால், இதை, ஒழிக்க கூடாதென்ற நிலைப்பாட்டிலேயே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளது. அக்கட்சியின் ஸ்தாபக தலைவர் மர்ஹூம் அஷ்ரபின் தெளிவான நிலைப்பாடும் இதுவே.

மக்களால், நேரடியாகத் தெரிவு செய்யப்படும் போதுதான் எல்லோருக்குமான எங்கள் ஜனாதிபதி என்ற உரிமையிருக்கும். இலங்கையில் உள்ள அத்தனை பிரஜைகளும் வாக்களிப்பதால் ஜனாதிபதிக்கும் ஒரு கடப்பாடு ஏற்படுகின்றது.

மாறாக பாராளுமன்றம் பிரதமர் ஒருவரை தெரிவு செய்வதால் அவர், ஒரு மாவட்டத்துக்கு அல்லது பிரதேசத்துக்கு உரியவராகவே அர்த்தப்படும் என மேலும் தெரிவித்தார். (4)

# ரயிலில் மோதுண்டு இரு காட்டு யானைகள் பலி

(கொழும்பு)

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி கோதுமை மாவை ஏற்றிச் சென்ற ரயிலில் நேற்று அதிகாலை மோதுண்டு தலபத் கந்த புகையிரத நிலையத்திற்கு அருகில் இரண்டு காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதுடன் மற்றொரு யானை காயமடைந்துள்ளதாகவும் கல்ஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது காட்டு யானைகளால் ஏற்பட்ட விபத்தினால் ரயில் தடம் புரண்டதுடன் ரயில் சேவையும் பாதிக்கப்பட்டு இருந்தது.

இதன் காரணமாக கொழும்பில் இருந்து மட்டக்களப்பு வரையிலான புகையிரத சேவைகள் இரத்து செய்யப்பட்டு இருந்ததாகவும் புகையிரத திணைக்களம் தெரிவித்திருந்தது.

கல்ஓயா காட்டில் இருந்து அதிக எண்ணிக்கையிலான காட்டு யானைகள் குடிநீருக்காக இப்பகுதிக்கு அடிக்கடி வந்து செல்கின்றன.

இதன் போதே ஏராளமான காட்டு யானைகள் ரயிலில் அடிபட்டு இறப்பதாகவும் இதற்கு முன்னரும் இவ்வாறு பலமுறை விபத்து சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (4)


## கிளிநொச்சியில் விவசாயத் துறையில் தொழிற் பயிற்சிக்கான வாய்ப்பு...

கிளிநொச்சி பரந்தனில் இயங்கிவரும் "நவஜீவனம்" பண்ணையில் தொழில் பயிற்சிக்கான வாய்ப்பு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**12 மாதங்கள் சம்பளத்துடன் சுவடிய பயிற்சி வழங்கப்படும். பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்யும் பட்சத்தில் சான்றிதழ் மற்றும் தொழில் ஒன்றை ஆரம்பிக்க ஊக்கத்தொகையும் வழங்கப்படும்**

'விழிப்பு கூட்டுப்பண்ணை'




**கல்வித் தகைமை:**

- க.பொ.த. (சா/த) பரீட்சை விவசாயம் உட்பட 4 பாடங்கள்.
- விவசாய மற்றும் கால்நடை வளர்ப்பில் ஆர்வம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு நிர்வாக தர பயிற்சியும் வழங்கப்படும்.

பயிற்சியின் நிறைவில் பண்ணையில் வேலை வாய்ப்புக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தொடர்புக்கு: 077 215 5535** (11757)


# அத்தியாவசிய மருத்துவ உபகரணங்களை இலங்கைக்கு வழங்கிய இந்தியா



(கொழும்பு)

இந்திய அரசாங்கத்தினால் 1990 "சுவசரிய" அம்புலன்ஸ் சேவைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 3.3 தொன் அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் நேற்று முன்தினம் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவினால் "சுவசரிய" பவுண்டேஷனின் தலைவர் துமிந்த ரத்நாயக்கவிடம் கையளிக்கப்பட்டன.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் கடந்த மார்ச் மாதம் கொழும்பிலுள்ள "சுவசரிய" தலைமைக் காரியாலயத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது, அவர்கள் மருந்துவ உபகரணங்களுக்கான தட்டுப்பாட்டிற்கு முகங்கொடுத்திருப்பது குறித்து எடுத்துரைக்கப்பட்டது. அதற்கான உடனடி நடவடிக்கையாக இலங்கைக்கு அவசியமான மருத்துவ உபகரணங்களை அனுப்பிவைப்பதற்கு கரியல் என்ற இந்தியக்கப்பல் பணியில் ஈடுபடுத்தப்பட்டது.

அக்கப்பல் ஊடாக "சுவசரிய" பவுண்டேஷனுக்குரிய மருத்துவ உபகரணங்களுக்கு மேலதிகமாக அம்பாந்தோட்டை தேசிய மருத்துவமனை, பேராதனை போதனா மருத்துவமனை மற்றும் யாழ். போதனா மருத்துவமனை ஆகியவற்றுக்கு அவசியமான மருத்துவ உபகரணங்களும் நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. (4)


## துயர் பகிர்கின்றோம்

தெல்லிப்பழை புற்றுநோய்
வைத்தியசாலையில்
மருந்தாளராகக் கடமையாற்றும்
**தனபாலசிங்கம் கிரீந்திரன்** அவர்களின்
அன்புத் தாயார்

**தனபாலசிங்கம் இராசம்மா**

கடந்த 18.05.2022 அன்று இறைபதமடைந்தார்.
அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக் கொள்கிறோம்.

**நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்கள்
ஒன்றியம்.
யாழ்ப்பாணம்.**

(11753)



## நல்லை மங்கையர்க்கரசியின் விழிநீர் அஞ்சலி



எமது பாடசாலையின் தகவல்
தொழில்நுட்ப ஆசிரியை
திருமதி **தாரணி தினேஷ்**
அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர்.**
**சின்னையா
தங்கராஜா**

அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது விழிநீர்
அஞ்சலியைத் தெரிவித்து
கொள்கிறோம். அன்னாரின்
ஆன்ம இளைப்பாற்றிற்காக
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

(c-4434)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்.**


# மு.வண்டி விபத்து இருவர் பலி

(கொழும்பு)

தனமல்வில பகுதியில் ஒன்பது பேருடன் சென்ற முச்சக்கர வண்டி ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் ஐவர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தனமல்வில பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொலர் தட்டுப்பாட்டால் பாதிக்கப்படுவது ராஜபக்ஷர்கள் அல்ல மக்களே

## உதய கம்பன்பில சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் நாட்டுக்கு டொலர் அனுப்புவதை தவிர்ப்பதன் மூலம் ஒருபோதும் ராஜபக்ஷர்கள் பாதிக்கப்பட போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

மாறாக இந்த நடவடிக்கையினால் சாதாரண நடுத்தர மக்களே பாதிக்கப்படுவார்கள் என்பதால் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் வங்கிக் கட்டமைப்பின் ஊடாக நாட்டுக்கு டொலர் அனுப்ப வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மேலும் ரஷ்யாவிடமிருந்து குறைந்த விலைக்கு எரிபொருளை பெற்றுக்கொள்ள ஏன் அவதானம் செலுத்தவில்லை என்பதை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

உக்ரைன் - ரஷ்யா மோதலை தொடர்ந்து பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவிடமிருந்து எரிபொருள் கொள்முதலை தவிர்த்து வருகின்ற போதும் ஆசிய நாடுகள் அதனை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்வதாகவும் உதய கம்மன்பில சுட்டிக்காட்டினார்.

எனவே சர்வதேச உதவிகளை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் அரசமைப்பு சார்ந்த ஒருசில விடயங்களை மறுசீரமைக்க வேண்டும் என்றும் உதய கம்மன்பில குறிப்பிட்டார். (4)

# சீனாவின் அன்பளிப்பு நாட்டை வந்தடைந்து

(கொழும்பு)


சீனாவின் அன்பளிப்பிலான அத்தியாவசிய மருந்துப்பொருட்கள் தாங்கிய விமானம் ஒன்று நாட்டை வந்தடைந்துள்ளது.

14 அத்தியாவசிய மருந்துகள் உள்ளிட்ட 28 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மருந்துப்பொருட்களும், மருத்துவ உபகரணங்களும் அதில் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஹொங்கொங்கில் இருந்து பி - 747 என்ற விமானத்தினூடாக இந்த மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவப்பொருட்கள் நேற்று முன்தினம் இரவு நாட்டை வந்தடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனை இலங்கைக்கான சீனத்தூதுவர், சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவிடம் கையளித்ததாக குறிப்பிடப்படுகின்றது. (4)

# காத்தான் குடியில் கைக்குண்டு மீட்பு



(கொழும்பு)

காத்தான்குடி பிரதான வீதியிலுள்ள ஹோட்டல் ஒன்றின் பிற்பகுதியில் நிலத்தை தோண்டும் போது அதில் இருந்து கைக்குண்டு ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

நிலத்தை தோண்டி கழிவு நீரை விடுவதற்காக தாங்கி ஒன்றை கட்டுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு பொலிஸார் சென்று கைக் குண்டை கைப்பற்றியதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான் குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4)

# நோயாளி மரணம் மருத்துவர் மீது தாக்குதல்

(பதுளை)

பதுளை பொது மருத்துவமனையில் 15 ஆம் இலக்க நோயாளர் விடுதியில் கடமையாற்றிய மருத்துவர் ஒருவர், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர் ஒருவரின் உறவினர்களால் தாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

71 வயதான நோயாளி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தமையை அடுத்து, அவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் மீது இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடையதாக 3 பேர் பதுளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில், மருத்துவரை தாக்கியமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பதுளை மருத்துவமனையின் மருத்துவர்கள் மருத்துவமனை வளாகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (4)

# வீட்டிற்குள் புகுந்த லொறி இரு சிறுவர்கள் படுகாயம்

(திருமலை)

திருகோணமலையில் இடம்பெற்ற விபத்தில் சிறு வர்கள் இருவர் படுகாயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் லொறியொன்று பாதையை விட்டு விலகி வீடொன்றில் மோதி விபத்துக்குள்ளானதிலேயே இரண்டு சிறுவர்கள் படுகாயமடைந்து கந்தளாய் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக கந்தளாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தையடுத்து லொறியின் சாரதியை கைது செய்துள்ளதோடு, விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் தலைமையக பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 250 | 350 |
| உருளைக்கிழங்கு | 230 | 230 | 230 | 240 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 420 | 600 |
| தக்காளி | 800 | 650 | 650 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 200 | 140 |
| கோவா | 350 | 300 | 300 | 350 |
| கரட் | 200 | 380 | 380 | 400 |
| பூசணி | 120 | 130 | 120 | 140 |
| புடோல் | 260 | 200 | 220 | 280 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 480 | 450 | 200-550 | 550 |
| பெரிய வெங்காயம் | 230 | 240 | 230 | 240 |
| பாகற்காய் | 850 | 750 | 800 | 600 |
| வெண்டக்காய் | 200 | 160 | 180 | 350 |
| கருணைக் கிழங்கு | 200 | 240 | 150 | 200 |
| பயற்றங்காய் | 400 | 400 | 350 | 320 |
| லீக்ஸ் | 240 | 260 | 280 | 300 |
| பீற்றூட் | 380 | 350 | 280 | 380 |
| கறிமிளகாய் | 600 | 500 | 600 | 550 |
| முருங்கைக்காய் | 1200 | 1300 | 1000 | 1600 |
| போஞ்சி | 800 | 700 | 800 | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | 160 | -- | 320 |
| கீரை - 1 பிடி | 80 | 40 | 120 | 100 |
| தேசிக்காய் | 600 | 500 | 600 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 100-200 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 200 | 180 | 200 |
| வெங்காயப்பூ | -- | 600 | -- | -- |
| முள்ளங்கி | 160 | 200 | -- | 320 |
| பொன்னாங்காணி | 60 | 70 | 100 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | -- | 160 | -- | 150 |

# உடுப்பிட்டி சிவசிதம்பரத்தின் 20 ஆவது நினைவு தினம் இன்று



கரவெட்டி பெரிய தோட்டத்தை தனது வசிப்பிடமாகக் கொண்ட சிவசிதம்பரம் தாய்வழி, தந்தை வழியில் இரண்டு மணியகாரரின் பேரனாக விளங்கினார். 1922 ஆம் ஆண்டு ஜூலை 20 ஆம் திகதி பிறந்தார்.

சிவா தனது ஆரம்பக்கல்வியினை கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் மேற்கொண்டார்.

பின்பு உயர் கல்வியை கொழும்பு வெஸ்லிக் கல்லூரியிலும் மேற்கொண்ட சிவா சட்டக்கல்லூரி மாணவனாகி சட்டத்தரணியானார்.

1960 ஆம் ஆண்டு மார்ச் மாத தேர்தலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

1961 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி தந்தை செல்வா தலைமையில் மேற்கொள்ளப்பட்ட அரசாங்கத்துக்கு எதிரான சாத்வீக போராட்டத்தில் சிவா தன்னையும் இணைத்துக் கொண்டார்.

61 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்த போது வடகிழக்கில் நிகழ்ந்த கொடூரங்களை பாராளுமன்றத்தில் கொண்டு வந்து அம்பலப்படுத்தியவர்களில் சிவா முக்கியமாக இருந்தார்.

1970 ஆம் ஆண்டு வல்வெட்டித் துறை ஞானமூர்த்தி ஐயாவும் கதிரவேற் பிள்ளை ஐயாவும் இணைந்து தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டதன் காரணமாக இலங்கை தமிழ் அரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சி இணைந்து தமிழர் ஐக்கிய முன்னணி உருவாக்கப்பட்டது.

தமிழர் ஐக்கிய முன்னணி வட்டுக் கோட்டை தீர்மானத்தின் பிரகாரம் தமிழர் ஐக்கிய கூட்டணியானது. கூட்டணி யின் தலைவர்களாக ஜீ.ஜீ.பொன்னம்பலம், எஸ்.யே.வி.செல்வநாயகம், சௌ.தொண்டமான் ஆகியோர் கூட்டாக தெரிவு செய்யப்பட்டனர்.

மு.சிவசிதம்பரம் செயலாளராக தெரிவு செய்யப்பட்டார். ஒன்றன் பின் ஒன்றாக மூன்று தலைவர்களும் இற ந்த பின்பு தலைவராக சிவசிதம்பரம் தெரிவானார்.

1977 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் போட்டியிடப்பட்ட கூட்டணி சார்பில் போட்டியிட்டோர் 18 தொகுதிகளில் வெற்றி பெற்றனர். நல்லூர் தொகுதியில் சிவா அதிக மேலதிக வாக்குகளை பெற்று சாதனை படைத்தார்.

தமிழ் அரசியலில் தொடர்ந்து செயற் பட்ட சிவா நோய்வாய்ப்பட்டு 2002 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் திகதி அதிகாலை 1.30 மணியளவில் தனது 79 வயதில் தாயக மண்ணையும் தமிழ் மக்களையும் பிரிந்து இன்றுடன் 20 வருடங்கள் கடந்தபோதும் அவரது செயற்பாடுகள் மக்கள் இதயங்களில் இருந்து அகற்றப்படவே இல்லை.

கரவெட்டி மன்னவன் இளங்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்ப குணம் படைத்தோர் பேச்சாளராக வர வேண்டாம்.

– ஹென்றி வார்டு பீச்சர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண்டும்!

நாட்டில் டொலருக்கு மிகப்பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அரச ஊழியர்களின் சம்பளத்தை வழங்குவதிலேயே பெரும் இடர்பாடுகளைச் சந்திக்க வேண்டியதாயிற்று. எதிர்காலத்தில் பஞ்சம் தலைவிரித்தாடும்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

மேற்படி விடயங்களைக் கூறுவதற்கு ஒரு பிரதமர் தேவை என்றால், அது இலங்கைக்கு மட்டுமாகவே இருக்க முடியும்.

பொருளாதார நெருக்கடி காரணமாக கிளர்ந்தெழுந்த சிங்கள மக்கள் ராஜபக்ஷ ஆட்சியை நிராகரித்துப் பெரும் போராட்டம் நடத்தினர்.

அந்தப் போராட்டம் காரணமாக மகிந்த ராஜபக்ஷ தனது பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்தார்.

மகிந்தவின் பதவி விலகல் மக்களை அமைதிப்படுத்தவில்லை.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பதவி விலக வேண்டும் என்பதே அவர்களின் கோசமாக இருந்தது.

இந்நேரத்தில் பாராளுமன்றத்தில் ஒற்றை ஆசனத்தைக் கொண்டிருந்த ரணில விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஆசைப்பட்டு மக்கள் மத்தியில் பசப்பு வார்த்தைகளைத் தூவி, ராஜபக்ஷ தரப்பைக் காப்பாற்றும் கயமைத்தனத்தைச் செய்தார்.

அவர் செய்த வஞ்சகத்தனம் நீதிக்கான மக்களின் போராட்டத்தை நீத்துப்போகச் செய்தது.

இப்போது ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிரான கோசம் அடங்கிப்போக, நாட்டில் பஞ்சம், பசி ஏற்படும். மூன்றுவேளை உணவை உட்கொள்ள முடியாத அவலம் ஏற்படலாம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறுவதுதான் அவரின் மிக உச்சமான துரோகத்தனமாகும்.

பிரதமராகப் பதவியேற்றதும் எனக்கு ஒரு மாத கால அவகாசம் தாருங்கள். பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பேன், வெளிநாடுகளுடன் கதைத்து உதவி பெறுவேன் என்றெல்லாம் கூறிய ரணில், இப்போது கைவிரித்துவிட்டார்.

உண்மையில் மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியிலிருந்து துரத்தியதுபோல கோட்டாபய ராஜபக்ஷவையும் ஜனாதிபதிப் பதவியில் இருந்து மக்கள் துரத்தியிருந்தால், இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு உலக நாடுகள் நிச்சயம் உதவியிருக்கும்.

ஆனால் உலக நாடுகளின் உதவியை இல்லாமல் செய்தவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆம், ராஜபக்ஷ குடும்பத்தைக் காப்பாற்றியதன் மூலம் – கோட்டாபய ராஜபக்ஷவின் ஜனாதிபதிப் பதவியை தக்கவைத்ததன் மூலம் வெளிநாட்டு உதவிகளை இல்லாமல் செய்தவர் பிரதமர் ரணில்.

எனவே இன்னமும் காலம் கடக்கவில்லை. பிரதமர் ரணில் இக்கணமே தனது பதவியை இராஜினாமாச் செய்வாராயின், வெளிநாடுகளின் உதவிகள் கிடைப்பதற்கான சூழமைவு நிச்சயம் ஏற்படும்.

## இலங்கைக்கான விமான சேவையை நிறுத்தியது ரஷ்யா

(கொழும்பு)

எயார்பஸ் A330 விமானம் கட்டுநாயக்கவில் தடுத்து வைக்கப்பட்டதை அடுத்து, ரஷ்ய விமான நிறுவனமான ஏரோப்ளோட் இலங்கைக்கான விமானங்களை தற்காலிகமாக நிறுத்த முடிவு செய்துள்ளது.

தடையில்லாமல் விமான சேவை இடம்பெறும் என்பதில் நம்பிக்கை இல்லை என்பதனால் இலங்கைக்கான சேவைகளையும் டிக்கெட் விற்பனையையும் இடைநிறுத்துவதாகவும் அந் நிறுவனம் அறிவித்துள்ளது.

அதன்படி ஜூன் 2, 4 மற்றும் 5 திகதிகளில் கொழும்பில் இருந்து மொஸ்கோவிற்குத் திரும்பும் பயணிகள் ஜூன் 4 மற்றும் ஜூன் 5 ஆம் திகதிகளில் புறப்படும் விமானங்கள் மூலம் நாடு திரும்பலாம் என்றும் அறிவித்துள்ளது.

2021 ஆம் ஆண்டு நவம்பர் 4 ஆம் திகதி இலங்கையில் விமான சேவையை ஆரம்பித்த ரஷ்யாவின் ஏரோப்ளோட் விமான நிறுவனம் எட்டு மாதங்களுக்குப் பின்னர் இலங்கைக்கான விமான சேவைகளை இடைநிறுத்தியுள்ளது.

குத்தகை நிறுவனத்தில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக கடந்த 2 ஆம் திகதி, ரஷ்ய விமானம் இலங்கையிலிருந்து வெளியேறுவதற்கு கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றம் விதித்த தடை உத்தரவு 16 ஆம் திகதி வரை அமுலில் உள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ரஷ்யாவின் வெளிவிவகார அமைச்சு மொஸ்கோவிற்கான இலங்கைத் தூதுவர் ஜனிதா அபேவிக்ரம லியனகே வை வரவழைத்து விமானம் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டமைக்கு கடும் கண்டனத்தை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (4)

## ஐந்து நாட்களும் பாடசாலை நடத்துவது சாத்தியமற்றது

### இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்

(கொழும்பு)

நாட்டில் தற்போதுள்ள சூழ்நிலையானது ஒட்டுமொத்தமாக வாழ்க்கையை கொண்டு நடாத்த முடியாத நிலைமையாக உள்ளது.

இந்நிலையில் பாடசாலை களை வாரத்தில் ஐந்து நாட்களும் நடத்துவதென்பது பெரும் நெருக்கடியான விடயம். அதிலும் ஆசிரியர்கள். ஐந்து நாட்களும் பயணம் செய்து கற்பித்தல் பணியில் ஈடுபடுவது முடியாத காரியம் என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாளுக்கு நாள் எரிபொருட்களின் விலைகள் அதிகரித்த படியே உள்ளன. இந்நிலையில் ஒவ்வொரு நாளும் பயணம் செய்வதென்பது உழைப்பின் முழுத்தொகையையும் பயணத்திற்கு செலவழிக்க வேண்டியுள்ளது.

ஆசிரியர்களை முழு நாட்களும் அழைப்பதெனில் அவர்களின் போக்குவரத்து செலவினத்தில் அரைப்பங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இல்லையெனில் மற்றைய திணைக்களங்களில் பின் பற்றப்படும் நடைமுறைகளுக்கு ஒத்ததாக பாடசாலைகளை இயக்குவதே சிறந்த வழியாகும்.

ஆசிரியர்களின் பாட நேரங்களை அதிகரித்து அவர்களை சுழற்சி முறையில் அழைப்பதே பொருத்தமானது. இதனை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த நடைமுறையானது பாடசாலை அதிபரின் நிர்வாக நடைமுறைக்கு உட்பட்டதாக நெகிழ்ச்சிப் போக்குடையதாக இருக்க வேண்டும் என தெரிவித்துள்ளது. (4)

## பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வீட்டுக்கு அருகில்

### இராணுவ சிப்பாய் சுட்டு உயிர் மாய்ப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ சுமந்திரனின் பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டிருந்த இராணுவ சிப்பாய் ஒருவர் தன்னைத் தானே சுட்டு உயிரை மாய்த்துக்கொண்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

வெள்ளவத்தை தயா வீதிக்கருகில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

22 வயதான குறித்த இராணுவ சிப்பாய் தமது கடமை நேர துப்பாக்கியை பிரயோகித்து தன்னைத்தானே சுட்டு உயிரை மாய்த்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரனின் கொழும்பு வெள்ளவத்தையில் அமைந்துள்ள இல்லத்திற்கு செல்லும் ஒழுங்கையில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்தார் என குறிப்பிடப்படுகின்றது. (ம-7)


## நாளைமுதல் 10 ஆம் திகதி வரை மின்வெட்டுக்கு அனுமதி

எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை நாட்டில் மின்வெட்டினை மேற்கொள்ளப்பட தேசிய பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி, ஜூன் 6 முதல் 10 வரை 2 மணித்தியாலங்கள் 15 நிமிடங்களும் மற்றும் ஜூன் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் 1 மணி நேரமும் மின்வெட்டு அமுல்ப்படுத்தப்படவுள்ளதாக பொதுப்பயன்பாட்டு ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்

### தவறு செய்பவர்களை திருத்த வேதம் கூறும் வழி...



பல குடும்பங்களில் கணவனோ அல்லது மனைவியோ அல்லது இருவருமே இறுதிவரை இயேசுவின் வழிக்கு வராமலேயே இறந்து போகிறார்கள். இதற்கு கணவன் இல்லது மனைவியின் நடத்தையே காரணம்

'மனைவியின் கற்புள்ள நடத்தையால் கணவன் திருந்துவான்' என்று வேதம் கூறுகிறது. (1தேதுரு 3:1,2).

கற்புக்கு பல அர்த்தம் கூறுப்படுகிறது. எதிர்பாலினத்தவரோடு ஒருவர் ஒடர் ரீதியான தொடர்பை ஏற்படுத்திக் கொண்டால் அவரை கற்பு இழந்தவர் என்று உலகம் கூறுகிறது. அது சரிதான். ஆனால் ஒருவரது அந்த ஒரு நடத்தையை மட்டும் அடிப்படையாக வைத்து கற்பை எடைபோடக் கூடாது. 'எல்லாக் கற்புடனும்' என்ற வார்த்தையின்படி (1 திமோ.5:1), உடல், மனம் ரீதியான கற்பை மட்டுமல்ல, எல்லாக் காரியங்களிலும் கற்புடன் காணப்பட வேண்டும்.

இறைவன், கணவனுக்கு கீழ்ப்படிதல், சோம்பலை தவிர்ப்பது (நீதி.31:27), சுபபோகத்தை விரும்பானது (1 திமோ.5:6) உட்பட ஏராளமான நற்குணங்களுடனும் மனைவி காணப்பட வேண்டும். என அனைத்து நற்குணங்களை கொண்ட மனைவியே கற்புள்ள நடத்தையை உடையவள். இப்படிப்பட்ட குணசாலியான மனைவியையே கணவன் முழுமையாக நம்புவான். (நீதி.31:10,11).

பல குடும்பங்களில் காணப்படும் குழப்பங்கள், பிரச்சினைகளிற்கும் பெண்களே காரணமாக அமைந்து விடுகின்றனர். கணவன் குடிகாரனாகவோ, விபச்சாரக்காரனாகவோ இருந்தால் அவனைத் திருத்துவதற்கு பலவழிகளை பெண்கள் நாடுகிறார்கள். இப்படிப்பட்டவனால் தனது மானம், குடும்ப மானம், குழந்தைகளின் எதிர்காலம் போய்விடும் என்ற பயம், சுயநலம் இருப்பதால் அப்படிச் செய்கிறாள். ஆனால் கணவன் பொருளாசைக்காரனாகவோ, இலஞ்ச-ஊழல் பேர்வழியாகவோ, பெருந்திண்டிக்காரனாகவோ இருந்தால், அப்படிப்பட்டவனை திருத்த மனைவி முற்படுகிறாளா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில் பல்வேறு திருட்டு சம்பவங்களில் ஈடுபட்ட மூவர் பொலிஸாரால் கைது



(குருமன்காடு)

வவுனியாவில் 9 இடங்களில் இடம்பெற்ற பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் 3 நபர்கள் பொலிஸாரால் நேற்றையதினம் கைது செய்யப்பட்டனர்.

கடந்த மாதம் வவுனியாவின் உக்குளாங்குளம் பகுதியில் 4 வீடுகளிலும், பண்டாரிக்குளம் பகுதியில் 2 வீடுகளிலும், நெளுக்குளம் பகுதியில் ஒரு வீட்டிலும், கூமாங்குளம் பகுதியில் ஒரு வீட்டிலும், மகாறம்பைக்குளம் பகுதியில் ஒரு வீட்டிலும் என 9 இடங்களில் நகைகள், மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டி, இலத்திரனியல் உபகரணங்கள் திருடப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டுக்கு அமைவாக வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில், வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் தீவிர விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது குறித்த சம்பவம் தொடர்பில் மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போது அவர்களிடம் இருந்து மோட்டர்கள் 3, சிலிண்டர்கள் 8, ஜெனரேற்றர், தொலைக்காட்சி, கிறைண்டர், சைக்கிள், மோட்டர் சைக்கிள் மற்றும் தோடு, மூக்குத்தி சங்கிலி அடங்கிய 2 பவுண் நகைகள் என்பன மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4-6-250)

## திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இளைஞன் துன்னாலையில் கைது



(கரணவாய்)

துன்னாலை கிழக்குப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் நின்ற சிறுமியை தள்ளி விழுத்திவிட்டு பணம் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து ஏழு துவிச்சக்கர வண்டிகளும், தொலைக்காட்சி பெட்டி ஒன்றும் மீட்கப்பட்டதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமை துன்னாலை கிழக்கு பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் நின்ற சிறுமியை தள்ளி விழுத்தி விட்டு மேசையில் லாச்சிக்குள் இருந்த பணம் கொள்ளையிடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி காஞ்சன விமலவீர தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். இதனைத் தொடர்ந்து துன்னாலை பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவரிடமிருந்து ஏழு துவிச்சக்கரவண்டிகளும் தொலைக்காட்சி பெட்டி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. (4-6-60)

## தமிழக அரசின் உதவித்திட்டம்
### வவு.,கிளிநொச்சியில் வழங்கி வைப்பு





(வவுனியா)

வவுனியாவில் தமிழக அரசினால் வழங்கப்பட்ட நிவாரணப் பொதிகள் வவுனியா தாண்டிக்குளத்தில் வழங்கி வைக்கப்பட்டது.

அந்தவகையில் நேற்றைய தினம் வவுனியா தாண்டிக்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள வசதியற்ற 295 பேருக்கு 10 கிலோகிராம் அரிசி பை வீதம் கிராம உத்தியோகத்தர் சி.ரவீந் திரன் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஸ்ரீ.கீதாஞ்சலி ஆகியோரால் வழங்கப்பட்டது.

அதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட புன்னைநீராவி கிராம உத்தியோகத்தர் பிரிவில் வாழும் மக்களுக்கு நேற்றைய தினம் தமிழக அரசினால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் கிராம உத்தியோகத்தர் ஊடாக வழங்கி வைக்கப்பட்டன. (4-6-316-299)

## பொன் சிவகுமாரனின்
### 48 ஆவது நினைவேந்தல் இன்று

(யாழ்ப்பாணம்)

தியாகி பொன் சிவகுமாரனின் 48 ஆவது நினைவேந்தல் நிகழ்வுகள் உரும்பிராயில் உள்ள நினைவிடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளதாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளனர்.

பொன் சிவகுமாரனின் காலத்தில் அவருடன் செயற்பட்ட அரசியல் தலைவர்கள், நண்பர்களினால் அஞ்சலி உரைகள் நிகழ்த்தப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (4-6)

## வணிகர் கழக கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடியினை கருத்திற் கொண்டு அரிசி ஆலை உரிமையாளர்கள், மற்றும் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்தல், பொதி செய்தல் ஆகிய துறைகளில் ஈடுபடும் சிறிய நடுத் தர தொழில் முயற்சியாளர்கள் , அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் ஆகியோருக்கான சந்தை வாய்ப்பினை பெற்றுக் கொடுப்பது தொடர்பாகவும், உள்ளூர் உற்பத்திகளைப் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது தொடர்பான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இல. 165 , மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ். வணிகர் கழகத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

இத்துறை சார்ந்த சகலரையும், மற்றும் அரிசி ஆலை உரிமையாளர்களையும் இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு யாழ். வணிகர் கழக செயலாளர் ச. சிவலோகேசன் அறிவித்துள்ளார். (4-6)

## கிளிநொச்சியில் 208 கிலோ கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது



(முறிகண்டி)

கிளிநொச்சி விவேகானந்தாநகர்ப் பகுதியில் 208 கிலோ கேரளா கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலிற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது குறித்த கஞ்சா பொதி மீட்கப்பட்டுள்ளது.

மன்னார் பகுதியை சேர்ந்த நபர் ஒருவரே சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் மேற்குறித்த பகுதியில் வாடகைக்கு வீடு பெற்று வசித்து வந்துள்ளதாகவும், வியாபார நோக்கத்திற்காகவே மன்னாரிலிருந்து அங்கு தங்கியுள்ளதாகவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மீட்கப்பட்ட கஞ்சா சுமார் 208 கிலோ எடையுடையது எனவும், அதன் இலங்கை பெறுமதி 5 கோடி மதிக்கத்தக்கது எனவும் கூறப்படுகிறது. விசாரணை மேற்கொண்டு வரும் விசேட அதிரடிப்படையினர் சந்தேகநபரையும், கஞ்சா பொதியையும், பயன்படுத்தப்பட்ட சொகுசு காரினையும் கிளிநொச்சி பொலிஸாரின் உதவியுடன் சட்டநடவடிக்கைக்குட்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளனர். (4-6-100-316)

## அம்பாள்புரம் மீனவர்களின்
### வலைகள்,துடுப்புக்கள் விசமிகளால் சேதம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு வவுனிக்குளத்தில் நன்னீர் மீன் பிடியில் ஈடுபட்டுவரும் அம்பாள்புரம் கிராம மீனவர்களின் வலைகள் மற்றும் துடுப்புகள் நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்களினால் அறுக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் தொழில் முடித்து வீடுதிரும்பிய நிலையில் மறுநாள் தொழிலுக்கு செல்வதற்கு வந்த நிலையில் மீனவர்களினால் வலைகள் அறுக்கப்பட்டு படகுகளும் சேதமாக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

குறித்த விசமத்தனமான செயலால் பிரதேச மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர். குறித்த சம்பவம் தொடர்பில் மல்லாவி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (3-6-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

பாரவூர்த்தி கட்டுப்பாட்டை இழந்து எதிர்த்திசையில் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது மோதியதோடு, அருகில் அமைந்துள்ள புதிய வர்த்தக கட்டிடத் தொகுதியில் மோதி விபத்துக்குள்ளாகியது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் பலியாகியதோடு, மற்றையவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணையினை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-250,299)

## இன்று முதல்...

நேற்று நாட்டை வந்தடைந்தது.

குறித்த கப்பலில் 3,500 மெற்றிக் எரிவாயு கொண்டுவரப்பட்டுள்ளதாகலாஃப்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. (ம-7)

## ஓங்காரரூபி...

நல்லூரில் இடம்பெற்ற விபத்தில் காலமானார்.

நல்லூர் பருத்தித்துறை வீதியில் நேற்று மதியம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இத்துயரச் சம்பவம் இடம்பெற்றது.

மண்டைதீவைச் சொந்த இடமாகக் கொண்ட இவர், 1991ஆம் ஆண்டு மண்டைதீவிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்தபோது, அங்கிருந்து வெளியேற முடியாத முதியவர்களையும் நோயாளர்களையும் பல வருடங்களாகப் பராமரித்து பாதுகாத்த இவர் மும்மொழிப் புலமை கொண்டவர். (ம-7,33)

## நீர்ப்பாசன...

பாஞ்சான் பகுதியில் மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் நிசாந்தன் சபீசன் என்ற இரண்டு வயது குழந்தையே உயிரிழந்துள்ளது

குறித்த சம்பவம் பற்றி தெரியவருவதாவது, தாயார் வீட்டுக் கிணற்றில் உடுப்பு துவைத்துக்கொண்டு இருந்த நேரம் குறித்த சிறுவன் வீட்டுக்கு வெளியே வந்து வீட்டுக்கு முன்பாக உள்ள பாரிய நீர்ப்பாசன வாய்க்காலில் வீழ்ந்துள்ளார்.

குறித்த சிறுவனை காணா நிலையில் தாயார் தேடியபோது குழந்தையை காணாத நிலையில் தொடர்ந்து உறவினர்கள் தேடிய நிலையில் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் நீர்ப்பாசன வாய்க்காலில் சடலமாக மீட்கப்பட்டார்.

உடனடியாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது குழந்தை உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

உயிரிழந்த குழந்தையின் சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது .

சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

## திங்கள் முதல்...

ளது.

முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகளுக்காக இவ்வாறு பாடசாலைகள் மீள திறக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 19ஆம் திகதி முதலாம் தவணையின் முதலாம் கட்டத்தை நிறைவுறுத்தி பாடசாலைகளுக்கான விடுமுறை வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.(ம-7)

## அத்தியாவசிய...

றுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சி.யமுனானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிறிது காலமாக நிலவிய மருந்துத் தட்டுப்பாட்டை வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனானந்தா வெளிக்கொணர்ந்தார்.

தொடர்ந்து பல மருத்துவ உதவிகள் கிடைக்கப்பெற்ற போதிலும் அவற்றினை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு பெற்றுக் கொடுப்பதில் பாரிய இழுபறி நிலை காணப்பட்ட நிலையில் அவை கிடைக்கப் பெற்றுள்ளன.

யாழ்.போதனா வைத்தியசாலை மருந்துத் தட்டுப்பாடு தொடர்பில் வலம்புரி செய்தி வெளியிட்டதோடு அது தொடர்பில் ஆசிரியர் தலையங்கமும் எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மனித...

எலும்புக்கூடு ஒன்று கரையொதுங்கியுள்ளது.

அனலைதீவின் வெளிச்சவீட்டுப் பகுதியிலேயே குறித்த எச்சங்கள் கரையொதுங்கியிருப்பதாக தெரியவந்துள்ளது.

மிக நீண்டகாலத்திற்கு முற்பட்டதாக அது இருக்கலாம் என்று மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதனிடையே பிந்திய தகவல்களின்படி குறித்த மண்டை ஓட்டு எச்சங்கள் மீட்கப்பட்டு படகு ஒன்றில் பொலிஸாரால் ஊர்காவற்றுறைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. (ம-7)

## இலங்கைக்கு...

யோருக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று சனிக்கிழமை சென்னையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், அதனைக் கையாள்வதற்கு 2 பில்லியன் ரூபாய் பெறுமதியான மனிதாபிமான உதவிகளை வழங்கியமைக்காக உயர்ஸ்தானிகர் மிலிந்த மொறகொட தமிழக முதலமைச்சருக்கும் தமிழக மக்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த தமிழக முதலமைச்சர் ஸ்டாலின், இலங்கையின் தற்போதைய நிலை குறித்து தான் கவலையடைவதாகவும் அத்தியாவசியப்பொருட்களைக் கப்பலில் ஏற்றி, இலங்கைக்கு உடனடியாக அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்கள் ஏற்றப்பட்ட இரண்டாவது கப்பல் அனுப்பி வைக்கப்படுவதற்குத் தயார் நிலையில் இருப்பதாகவும், மேலும் சில கப்பல்களை அனுப்பி வைப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பின்போது இலங்கை மற்றும் தமிழ்நாடு ஆகியவற்றுக்கு இடையில் நிலவும் மீனவர் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இலங்கைக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையில் காணப்படுகின்ற புராதன காலத் தொடர்புகள், கலாசார மற்றும் பாரம்பரிய ஒருமைப்பாடுகள் மற்றும் அவற்றை மேம்படுத்தல் ஆகிய விடயங்கள் குறித்தும் இருதரப்பினரும் கலந்துரையாடினர்.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட முதலமைச்சர் ஸ்டாலின், தமிழ் மொழியியல் ரீதியில் மிகவும் புகழ்பூத்த திருவள்ளுவரின் உருவச்சிலையைப் பல்கலைக்கழகங்கள் போன்ற பொருத்தமான இடங்களில் நிறுவுவதற்கு இலங்கை விருப்பம் காண்பிக்கவேண்டும் என்று வலியுறுத்தினார். அதனை ஏற்றுக்கொண்ட உயர்ஸ்தானிகர் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதாக உறுதியளித்தார். (ம-7)

## ஒரு வருட...

சரவை அமைச்சர்கள் தவிர்க்க வேண்டும் எனவும் அமைச்சரவைப் பத்திரத்தில் கோரப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து வாழும் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள பிரதமர் தீர்மானித்துள்ளார். (ம-7)

## இரு தரப்பு...

அந்நிறுவனம் இடைநிறுத்தியுள்ளது.

எனவே இரு நாடுகளுக்கும் பொருளாதாரத்துக்கும் இடையில் பாரிய பாதிப்புகள் ஏற்படுவதற்கு முன்னர் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கொரகபிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் தினேஷ் குணவர்தன மேற்கொண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார். (ம-7,4)



































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## TECHNO WORLD

### தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

**A/L 2024**

### தொழினுட்ப பிரிவு

- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, விவசாயம், புவியியல், ஊடகக்கல்வி, கணிதம் (7), சித்திரம்

திகதி:- 05.06.2022
ஆரம்ப நேரம் - 9.00 am

(11748)

Call Now: 077 017 5346

## French வகுப்பு

Online (Zoom)

மூலம் பூரணவிளக்கத்துடன் கற்பிக்கப்படும்.
கற்கைநெறிகள் வழங்கப்படும்.

(C-4429)

077 429 1587 / 077 072 3584

## கணக்கீடு

பிரத்தியேக / குழு வகுப்புக்கள்

A/L 2022, A/L 2023, A/L 2024

கொழும்புத்துறை/ கந்தர்மடம்

077 216 8884

A+++ சித்தி பெறுவதற்கான
புதிய அணுகுமுறையில் புதிய கற்பித்தல்....

நீண்ட கால அனுபவம் கொண்ட யாழ். நகரின் முன்னணி ஆசிரியர்

திரு.க.பா.பாலகஜன் (Tutorial staff)
B.com(Jaf),H.N.Dip. in ACC (ATI),Dip. in Edu(ousL), M.Com(Hons), ACC.Spl

(11486)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் வீதி ஓட்டுமடம் 1 ஆம் ஒழுங்கையில் சுற்று மதிலுடன் கூடிய 12 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. இக் காணிக்கு அராலி வீதி ஊடாக பாதை உண்டு.
(2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்)

பார்வையிடும் நேரம் : காலை 8.00 தொடக்கம்
மாலை 6.00 வரை

(11732)

தொடர்பு

076 844 6536, 074 008 9086

## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கி வரும் புடைவைக் கடைக்கு ஆண், பெண் வேலையாட்கள் தேவை.
சுன்னாகத்தை அண்மித்த பகுதியில் வசிப்போர் விரும்பத்தக்கது.

(11736)

077 172 3554

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ( நிலப்பரப்பு )

- A32, A9 இணையும் பிரதான வீதியில் ( றவுண்டப் வோட் )
- A9 பிரதான வீதியில் இருந்து 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.

தரகர் தேவையில்லை

(11745)

பார்வையிடும் நேரம்
காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

077 814 7389,
077 241 7589 - ஜெயம்

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM , ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK A1 Exam.
- Exam Registration center.

(11714)

வழிகாட்டல் துணையுடன் இணையவழிப் பரீட்சை A1 UK Exam / IELTS புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam junction, jaffna.

TP: 077 780 3970, 074 007 1970

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்கள், பிள்ளைகளின் யாதகக்குறிப்புகள், அவர்களின் பலன்களும் துல்லியமாக கணித்து பெற்றுக்கொள்ளலாம்.

உள்நாடு, வெளிநாட்டுத் திருமணத் தொடர்புகளுக்கு
Wahlen STR - 143 - 4242
Laufen, Swiss
Tel : 0041768185443 | 0041615544242
தொடர்புகளுக்கு ( உரும்பிராய் )
076 835 1932 / 021 223 2222

(11707)

## K.P.C - கோண்டாவில்

(366/8, இருபாலை வீதி - ஐயப்பன் கோவில் அருகில்)

**A/L 2024**

வர்த்தகப் பிரிவிற்கான பிரத்தியேக வகுப்புக்கள்

ஆரம்பம் : 06.06.2022 திங்கள் 03.00 pm

| | |
|---|---|
| பொருளியல் | : MR. S. Jeyakumar |
| கணக்கீடு | : MR. A.T. Suren |
| வணிகக்கல்வி | : MR. T.S. Richi |

(11719)

தொடர்புகளுக்கு - 077 723 8597

10வருட வெற்றிகரமான சேவையில். SEP/2022

## UK அல்லது கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

எமது வீசா ஆலோசனை வாயிலாக UK, கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிடமுடியும்

நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...

(C-4430)

WORLD EDUCATION CONSULTANCY
அலுவலகம்: புதிய உயர் தல்லூரி வளாகம் ஆரியகுளம் யாழ்ப்பாணம்
கிளை: சங்கத்தானை சாவகச்சேரி.
0779265447 / 0217200989

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு
அருகாமையில் 33 பரப்பு காணி விற்பனைக்கு

- A9 வீதியிலிருந்து இரண்டாவது காணி 100 m தூரம்
- கைதடி வழி பிள்ளையார் கோயிலில் இருந்து 100 m தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- நன்னீரூற்று.
- கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300 m தூரம்
- மூன்று வழிப் பாதை மேட்டுநிலம்
- கைதடி சந்தி 500 m தூரம்
- 2 ½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்

(11749)

பார்வையிடும் நேரம்
காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை

ஒரு பரப்பின் விலை - மூன்று இலட்சம்

தொடர்பு:- 077 623 4204, 077 288 0152,
076 658 3621

## மோட்டார் சைக்கிள் விற்பனை

Yamaha Mate 50
சிவப்பு மொடல் விற்பனைக்கு

தொடர்புகளுக்கு (C-4435)

077 357 3055

## A/L PHYSICS CLASS

24 Batch இற்கான Ranjith Sir இன் பௌதிகவியல் வகுப்பு 11.06.2022 அன்று காலை 7.30 மணிக்கு
YMCA கல்வி நிலையம்
தம்பசிட்டி இல் ஆரம்பமாகின்றது.
ஏனைய இடங்களில் தனிப்பட்ட குழு வகுப்புகளிற்கு.

(11733)

077 600 4896

# 45 சந்தேகநபர்கள் கைது

கடந்த மே மாதம் 9ஆம் திகதி காலி முகத்திடல் மற்றும் கொள்ளுப்பிட்டி பகுதியில் ஏற்பட்ட அமைதியின்மையை அடுத்து நாடளாவிய ரீதியாக இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் மேலும் 45 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (ம-7)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகத்தின் விசேட கல்வி பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் செல்வி **சந்திரிகா நவரத்தினம்** அவர்களின் அன்புத் தாயார்

### அமரர் மகேஸ்வரி நவரத்தினம்



அவர்கள் 04.06.2022 அன்று இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு நாமும் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

விசேட கல்விப் பிரிவு (11759)
யாழ்ப்பாணம் கல்வி வலயம், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.